# வடக்கு கிழக்கு ஆசிரியர்கள், கல்வித்திணைக்கள ஊழியர் சகலரினதும் இடமாற்றங்கள் இடைநிறுத்தம்

பக்கங்கள் எட்டு விலை ரூபா: 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 51 செவ்வாய் 27-03-1990 (பங்குனி 14) ஷஃபான் 29

## இடமாற்றுச்சபை உருவாகும்

கல்வித்திணைக்கள உத்தியோகஸ்தர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் யாவும் இடை நிறுத்திவைக்கப்பட்டுள்ளன. வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு மாவட்டரீதியான இடமாற்றங்களை மேற்கொள்வதற்கு மாற்றுச்சபை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இந்த மாற்றுச்சபையே மாவட்டரீதியான கல்வித்தொடர்பு இடமாற்றங்களை இனிமேல் மேற்கொள்ளும். இச்சபை சரியாக இயங்கத் தொடங்கும்வரையே சகல இடமாற்றங்களும் இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. இதுசம்பந்தமான சுற்றுநிருபங்கள் வடகிழக்கு மாகாணத்தில் உள்ள சகல கல்வித்திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

வடக்கு கிழக்கில்

## இரு வாரங்களில் பொலிஸ் நேர்முகப் பரீட்சை புலிகள் மூலம் விண்ணப்பித்தோர்க்கும் அழைப்பு

பொலிஸ் சேவைக்கு ஆட்களைத் திரட்டுவதற்கான நேர்முகப் பரீட்சை வடக்கு கிழக்கில் இன்னும் இருவாரத்தில் நடைபெற விருப்பதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த நேர்முகப் பரீட்சைக்கு விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி மூலமாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களுக்கு உரியவர்களும் அழைக்கப்படுவர் எனத் தெரியவருகிறது.

ஏப்ரல் முதல்வாரத்தில் யாழ்ப்பாணம் வவுனியா உட்பட வடக்கு கிழக்கு மாவட்டங்களில் இதுவரை விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்களின் அடிப்படையில் முதற்கட்டமாக ரிசேர்வ் பொலிஸ் சேவைக்கு ஆட்களைத் திரட்டும் நேர்முகப் பரீட்சை நடைபெறும் என அதிகாரி தெரிவித்தார் ஒவ்வொரு, உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் 75 பேர் நியமிக்கப்படுவர்.

✶ பதினொரு மாதங்களாக இந்தியப்படை சாதிக்காததை விடுதலைப்புலிகள் சாதிப்பு

# திருமலை செயலக தமிழ் ஊழியர்கள் நேற்று கோட்டைக்குத் திரும்பினர்

## சிங்கள அகதிகள் வெளியேறுத நிலையில் பாதுகாப்பிற்கு புலிகள் உத்தரவாதம்

திருமலை

கடந்த 11 மாதங்களாக திருமலை பிரடெரிக் கோட்டையில் அமைந்திருக்கும் கச்சேரிக்கு வேலைக்கு செல்லா திருந்த தமிழ் அரசாங்க ஊழியர்கள் நேற்று பிரடெரிக் கோட்டை கச்சேரிக்கு வேலைக்கு திரும்பினர்,

நேற்றுக்காலை 54 தமிழ்ஊழியர்கள் அங்குவேலைக்கு சென்ற போது சிங்கள ஊழியர்கள் அவர்களை வரவேற்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ரூபன் அளித்த உறுதிமொழியை அடுத்தே தாம் மீண்டும் கச்சேரிக்கு வேலைக்கு திரும்பியதாக ஊழியர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ந் திகதி பிரடெரிக் கோட்டைப் பகுதியில் வைத்து கச்

—8ம் பக்கம் பார்க்க

## மீளக்குடியமர்தல் நிவாரணம் ஏப்ரல் 15-ம் திகதிக்கு முன்னர் சகலருக்கும் வழங்கப்படும்

ஏப்ரல் 15ம் திகதிக்கு முன்னர் யாழ்மாவட்டத்தில் பதியப்பட்ட சகலருக்கும் மீளக்குடியமர்தல் நிவாரணம்வழங்கப்பட்டு முடிக்கப்படுமென யாழ் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

பிந்திப்பதிந்தவர்களுக்கான இரண்டாயிரம் ரூபா மீளக்குடியமர்தல் நிவாரணம்வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (03)

## சுந்தரலிங்கம் நியமனம்

யாழ் மாவட்டத்தின் புதிய கல்விப்பணிப்பாளராக திரு. ஆர். சுந்தரலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் ஏப்ரல் முதலாம் திகதி பதவியேற்பார் எனத்தெரியவருகின்றது.

தற்போது திரு. ஆர் சுந்தரலிங்கம் மன்னார் மாவட்டக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி வருகின்றார். மன்னார் மாவட்டத்திற்கு கண்டி

—8 ஆம் பக்கம் பார்க்க

## அன்னை பூபதி நினைவாக மறுமலர்ச்சிக் கழகம் சிரமதானம்

அன்னை பூபதியின் நினைவாக யாழ். பல்கலைக்கழக மறுமலர்ச்சிக்கழகம் ஒழுங்குசெய்துள்ளது சிரமதான நிகழ்ச்சி இன்று காலை 9 மணியளவில் கைதடி முதியோர் இல்லத்தில் நடைபெறும் இதனைத் தொடர்து

— 8 ஆம் பக்கம் பார்க்க

யாழ்மாவட்டத்தில்

## வன்செயலில் பாதிப்படைந்த 192 குடும்பங்களுக்கு நிவாரணம்

கடந்த கால வன்செயல்களின் போது யாழ்மாவட்டத்தில் மரணமடைந்த மற்றும் காயமடைந்த 192 பேரின் குடும்பங்களுக்கு இம்மாதம் நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

வன்செயலில் மரணமடைந்த 164 பேரினது குடும்பங்களுக்கும் வன்செயலில் காயமடைந்த 28 பேருக்குமே இம்மாதம் இந்நிவாரணம் வழங்கப்படவுள்ளது.

—8ஆம் பக்கம் பார்க்க

## தாயகம் திரும்பிய ஜவான்கள் காஷ்மீருக்கு அனுப்பப்பட்டனர்

இலங்கையில்இருந்து வாபஸ் பெறப்பட்ட இந்தியப்படைப் பிரிவுகள் இந்தியாவின் வட மாநிலமானகாஷ்மீருக்குஅனுப்பப்பப் பட்டு வருகின்றனர்.

காஷ்மீரில்தற்போது காணப்படும் முஸ்லிம் தீவிரவாதிகளின் உள்நாட்டு வன்முறையை கட்டுப்படுத்தவும் அண்டை

— 8 ஆம் பக்கம் பார்க்க

## தென்பகுதி அடியார்களும் மடுவுக்குவரப் புலிகள் அனுமதி

வருடாந்த மன்னார் - மடுத் திருப்பதிக்கு அடியார்கள் வழமை போல் வந்து போகலாம். விடுதலைப் புலிகள் இவ் விடயத்தில் எதுவித இடையூறுகளையும் அடியார்களுக்கு கொடுக்கமாட்டார்கள் என வவுனியா மாவட்ட விடுதலை புலிகள் மக்கள் முன்னணியின் பொறுப்பாளர் திரு. என். தினேஸ் தெரிவித்தார்

— 8 ஆம் பக்கம் பார்க்க

## அமைதிப்படைக்கு 294 கோடி ரூபா செலவு

(புதுடில்லி)

இலங்கையில் தங்கியிருந்த இந்திய அமைதிப்படையினருக்கு கடந்த ஜனவரி மாதம் வரை இந்திய ரூபா 294 கோடி செலவு செய்யப்பட்டது. இத்தகவலை இந்திய பாதுகாப்பு இணை அமைச்சர் பேராசிரியர் ராஜாராமண்ணா இந்திய மக்கள் அவையில் தெரிவித்தார்.

● தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை

## உதவி ஆசிரியர் பாதுகாப்பு நிதி வழங்காவிடில் பாடசாலைகள் ஸ்தம்பிதமடையும்

ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு நிதி உதவி ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

ஏப்ரல் மாதத்திற்குள் சாதக [illegible]

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல பாடசாலைகளும் அடுத்த தவணை ஒரு நாள் ஸ்தம்பிதமடையும்.

இவ்வாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் திரு.த.மகாசிவம் அவர்கள் முரசொலிக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில் இவ்விடயம் சம்பந்தமாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம், ஜனாதி

— 8 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப் பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1990. ஏப்ரல் 27ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
   - மெய்யியல்
   - நாடகமும் அரங்குக் கலைகளும்
   - நுண்கலைகள் பற்றிய வரலாறு
   - கிறிஸ்தவ நாகரிகம்
   - அரபு மொழியும் இஸ்லாமிய நாகரிகமும்
   - ஆங்கில இலக்கியம்
   - புவியியல்
   - இந்து நாகரிகம்
   - பொருளியல்
   - அரசறிவியல்
   - வர்த்தகமும் முகாமைப் படிப்புக்களும்
   - தமிழ்
   - சித்த மருத்துவம்
2. தற்காலிகப் போதனாசிரியர்
   - ஆங்கிலம்
   - கர்நாடக வாய்ப்பாட்டு
   - மிருதங்கம்
   - பரதநாட்டியம்
3. தற்காலிக கட்டுரை ஆசிரியர்
   - சமஸ்கிருதம்
   - புவியியல்
   - சரித்திரம்
4. தற்காலிக செய்முறை காட்டுநர்
   - சித்த மருத்துவம்
5. இடைவரவு விரிவுரையாளர்
   - நாடகமும் அரங்குக் கலைகளும்
   - அரபு மொழியும் இஸ்லாமிய நாகரிகமும்
   - கிறிஸ்தவ நாகரிகம்
   - ஆங்கில இலக்கியம்
   - நில அளவீடு (புவியியல்)
   - சட்டம்
   - முகாமைத்துவமும் ஒழுங்கமைப்பு நடத்தையும்
   - கணக்கியலும் கணக்காய்வும்
   - வரிவிதிப்பு
   - சமஸ்கிருதம்
6. இடைவரவுப் போதனாசிரியர்
   - கர்நாடக வாய்ப்பாட்டு
   - வயலின்
   - வீணை
   - மிருதங்கம்
   - பரதநாட்டியம்

குறிப்பு: சரித்திரத்தில் தற்காலிக கட்டுரை ஆசிரியர்.

பரீட்சையின் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும்.

தபால்மூலம்படிவங்களைப் பெற விரும்புவோர் சுய முகவரியிட்டு முத்திரை யொட்டப்பட்ட 23×10 செ.மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும் விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப் படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
23.03.1990

03216

இன்று செஞ்சிலுவைச் சங்க கொடிதினம்

# 'உங்களுக்கு உதவ எங்களுக்கு உதவுங்கள்'

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். பிரிவு இன்றுதனது வருடாந்த கொடி தினத்தை நடாத்துகிறது. இது தொடர்பாக செஞ்சிலுவைச் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

'எமது சங்கம் யாழ். பிரிவில் கடந்த சில வருடங்களாக மக்களின் துயர்துடைக்கும் பணியில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து தனது பங்களிப்பை செய்திருக்கின்றது. எமது மக்கள் அல்லல் படும்பொழுது தனது பங்களிப்பை இச்சங்கம் கஷ்டமான சூழ்நிலைகள் மத்தியிலும் அயராது பணியாற்றி வருகின்றது.

எமக்கு கிடைத்த மக்களின் ஆதரவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் நிதியுதவியும் பெரும் உதவியாக விருந்தது. எமது நிவாரண புனர்வாழ்வுபணிகள் தொடர எமக்கு மக்கள் ஆதரவுடன், நிதியும் மிகவும் அவசியம். தொடர்ந்தும் சர்வதேச நிதியுதவிகள் எங்களுக்குக் கிடைக்கும் என்றாலும் நாம் எமது பங்களிப்பாக ஒரு சிறு தொகையையேனும் செலுத்த வேண்டும்'.

நாம் எமது சேவைகளை தொடர வேண்டிய காலம் வெகுதூரத்திலில்லை. எப்போதும் நாம் வெளிநாடுகளின் உதவியை எதிர்பார்த்து நிற்க முடியாது என்பது தெளிவு.

ஆகையால் இதில் ஒரு ஆரம்பப்படியாக இந்தமுறை கொடிதினத்திற்கு உங்களால் இயன்ற நிதியுதவியை செய்யுமாறு வேண்டுகிறோம்' என இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெங்காயத்தின் விலை வேகமாக அதிகரிக்கிறது

வலி. மேற்கு பகுதியில் வெங்காயத்தின் விலை தற்போது அதிகரித்து வருகின்றது. வெங்காய அறுவடை தற்போது சங்கானை, சுழிபுரம், பண்டத்தரிப்பு, மாதகல் ஆகிய பகுதிகளில் நடைபெற்றுவருகிறது.

தனிப்பட்ட வியாபாரிகள் வெங்காயத்தை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்து லொறிகளில் கொழும்புக்கு அனுப்பிவருகின்றனர்,

உரவகை விலைஏற்றம், கிருமிநாசினி விலை அதிகரிப்பு கூலியாட்களின் சம்பள அதிகரிப்பு ஆகியவற்றால் மிகவும் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இந்த விலைஏற்றம் ஓரளவு நிவாரணத்தை கொடுத்துவருகிறது.

தற்போது இப்பகுதியில் வெங்காயம் கிலோ 10 ரூபா தொடக்கம் 14 ரூபா வரை தரத்தை பொறுத்து விற்பனையாகிறது. (13)

தெய்வ தரிசன வேளையிலும்

# 'கிக்' போட முனையும் அபூர்வ 'சீவராசிகள்'

சிவனொளி பாத மலைக்குச் செல்லும் யாத்திரிகளைப் பொலிஸார் தடுத்து சோதனையிடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

யாத்திரிகர்கள் மலைக்காற்றின் வேகத்திலிருந்து தம் உடலை கதகதப்பாக்கி உஷ்ணம் ஊட்ட தம்முடன் மதுபானம் எடுத்துச் செல்வது கண்டு பிடிக்கப் பட்டதனையடுத்தே பொலிஸார் அதனைத் தடுக்க இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுளது.

## திருப்திதான் ஆனாலும்...

யாழ். பலாலி இ. போ ச. பஸ் சேவை இப்போது சீராக நடைபெற்று வருவதாகத் திருப்தி தெரிவிக்கப்படுகிறது.

காலை வேளையில் கூடுதல் சேவையை நடாத்தினால் இத்திருப்தி பூரணம் பெறும் எனப் பயணிகள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

## பரீட்சைமுடிவு இன்னும் இல்லை

அண்மையில் வெளியிடப்பட்ட க. பொ. த உயர்தரப் பரீட்சைமுடிவுகள் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் சிலருக்கு இன்னும் கிடைக்கவில்லை என புகார்கள் தெரிவிக்கப்படுகின்றது.

முடிவுகள் வெளியாகி பல நாட்கள் கடந்துள்ளபோதும் இதுவரை இவர்களுக்கு பரீட்சை முடிவுகள் கிடைக்கவில்லை. (03)

## புதுவருடத்திற்கு மேலதிக பஸ் சேவை

சுமார் ஆயிரத்து ஐந்நூறு பஸ்கள் மேலதிகமாக சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன

தமிழ்-சிங்கள புதுவருடத்திற்கு முன்னர் இவை சேவையில் ஈடுபடுத்தப்படும் என போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் தெரிவித்துள்ளார்.

பஸ் பயணிகளின் சிரமங்களை நீக்கும் வகையில் மேலதிக பஸ்களை சேவையிலீடுபடுத்தும்படி ஜனாதிபதி விடுத்த பணிப்புரையின் பேரிலேயே இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

## மீண்டும் தலைவரானர்

யாழ் மாவட்டச் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக டாக்டர் ஆர். தெய்வேந்திரம் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## தொழிலாளர்க்கு லயன் வீடுகள்

லயன் வீடுகளில் வசிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு காணிகளுடன் சேர்ந்த நவீன வீடுகள் சொந்தமாக வழங்கப்படும் என பெருந்தோட்ட, கைத்தொழில் அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா கட்டனில் நடைபெற்ற இ. தொ. கா பொன் விழாவில் உரையாற்றிய போது தெரிவித்தார்.

வசதிகளில் மிகக் குறைந்தவர்கள் என்பதை ஏற்றுக் கொண்டு மலையக மக்களின் இன விகிதாசார அடிப்படைக்கு அதிகமாக அரசாங்க நியமனங்களை வழங்கப் பட வேண்டும் என இவ்விழாவின்போது பேசிய திரு. தொண்டமான் அவர்கள் தனது தலைமையுரையின் போது குறிப்பிட்டு பேசினார்,

## ரயில் - பஸ் இணைப்பு சேவை ஒழுங்கில்லை

யாழ். புகையிரத நிலையத்திற்கும் யாழ். பஸ் நிலையத்திற்குமான இணைப்பு பஸ் சேவை ஒழுங்காக நடைபெறுவதில்லை என புகார் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பில் இருந்து புகையிரதம் வரும் சரியான நேரத்தில் பஸ்கள் யாழ். புகையிரத நிலையத்திற்கு வருவதில்லை. இதனால் பயணிகள் பலர் பாதிப்படைந்து வருகின்றார்கள். (03)

# புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்

## பல்கலைக்கழக அனுமதிக்கான புள்ளிகள் கிடைக்காத மாணவர்கள் கவனத்திற்கு

★ நீங்கள் வெளிவாரியாக பட்டப்படிப்பினை (B. A) மேற்கொள்வதற்கு விண்ணப்பிக்லாம். இதற்கு A/L ல் மூன்று பாடங்கள் சித்தியடைந்திருந்தால் போதுமானது.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகளை எமது நிறுவனத்தில் செய்து கொள்ளலாம்

★ இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 10 4 - 90 ஆகவே அனுமதியை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

★ இப்பயிற்சிக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.

விபரங்களுக்கு:-
S. அருள்நங்கை

03205

# 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி



## அமரர் கந்தசாமி ஜெகநாதன்
(ஜெகன்)

தோற்றம்: 1958.12-19 மறைவு: 1990-02-26

'ஜெகன் ஜெகன்' என்றிச் செகம் புகழ் தலைவ!
செகத்தினை விடுத்து நீர் பரன்பதம் அடுத்தீர்
வற்றாப் பளையாளை வல்லி புரத்தானை
பற்றாய்ப் பணிந்தனை; பரன்பதம் பற்றினை!
தானமும் தவமும் தர்மமுஞ் செய்தனை;
போனகத் தானமும் பொருந்தவே செய்தனை;
முதலாளியாகவே விளங்கியபோதிலும்
இதமுடன் நற்றொழி லாளருக் குதவினை;
இடும்பை அறியா இயல்பினனாகவே
குடும்பத் தலைவனாய் விளங்கிய கோவே!
அள்ளி அள்ளி ஆதுவரக் கீந்தே
வள்ளலாய் விளங்கிய நம்மில்லத் தலைவா!
அன்பு மனைவியும் அருமை மக்களும் யாம்
துன்புற்றிங்கே தொடர்ந்திருந் தரற்ற
சடுதியி லிந்தத் தரணியை விடுத்தே
கடுகினீர் சிவனார் கழலிணை யடிகளை
அடைகநின் ஆத்மா அரியநற் சாந்தி
அடைக! அடைக! அடைகநற் சாந்தி

பிரிவால் துயருறும்,
மனைவி, பிள்ளைகள்
பெற்றோர்

நெல்லியடி
கரவெட்டி

03214

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெற்றோரின் கடமை

ஐரோப்பாவில் ஓர் கிராமம் திடீரென மூடு பனியால் மூழ்கியது அந்தச் செய்தி உலகெங்கும் பரவியது

தொண்டர் நிதி நிறுவனங்கள் நிதி திரட்டின.

இதைக் கேள்விப்பட்ட ஓர் அமெரிக்கக் குழந்தை தன்னுடைய தாயிடம் வந்து ''அம்மா மூடு வி நிவாரணத்திற்காக நான் சேர்த்து வைத்திருக்கின்ற 25 டாலர் பணத்தைக் கொடுக்கட்டுமா'' என்று தயங்கித் தயங்கிக் கேட்டது

உடனே அம்மாக்காரிக்கு ஒரே கோபம். குழந்தையை இழுத்துக் கொண்டு அவளுடைய வகுப்பாசிரியரிடம் போனாள்

''நீங்கள் எனது மகளுக்குச் சொல்லிக் கொடுக்கின்ற லட்சணம் இதுதானா? துயரப்பட்ட மக்களுக்கு உதவி செய்யலாமா என்று என்னிட்டையே வந்து யோசனை கேட்கிறாள். இந்தளவிற்கு அவளுக்கு மனிதாபிமானம் குறைவாக இருந்தால் எப்படி? உதவி செய்துவிட்டு வந்தல்லவா என்னிடம் சொல்லியிருக்க வேண்டும். உங்கள் பாடசாலையின் பாடமுறையில் உள்ள கோளாறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள்'' என்றாள்.

இச் சம்பவத்தை இங்கே ஏன் குறிப்பிடுகின்றோம் என்றால்;

அண்மையில் முல்லைத்தீவுப் பகுதியில் ஒரு பாடசாலையில் நடைபெற்ற சம்பவத்தாலேயாகும்.

அப்பாடசாலையின் அபிவிருத்திச்சங்கக் கூட்டத்தில் சில பெற்றோர் தாமதமாகவே வந்து கலந்து கொண்டனர்.

மறுநாள் வகுப்பாசிரியை, நேரகாலத்துடன் வந்த பெற்றோரின் பிள்ளைகளுக்கு மட்டும் இனிப்பு வழங்கியுள்ளார்.

இதைக்கண்டு பெற்றோர் கொதித்தெழுந்துள்ளனர்.

வகுப்பாசிரியை செய்தது சரியோ, தவறோ என்பது ஒருபுறமிருக்க, பெற்றோர் தாம் தமது கடமையில் தவறியதால் தமது பிள்ளைகள் அவமானப்பட வேண்டியேற்பட்டதே என்று உணராதது மிகவும் தவறுதம்.

அதைவிடுத்து அவர்கள் ஆசிரியைமேல் கோபம் கொள்வதில் பிரயோசனமில்லை.

இன்று பெருந்தொகையான பெற்றோர் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பி வைத்ததுடன் தமது கடன் முடிந்தது என்று நினைக்கின்றனர்.

பிள்ளைகளின் பள்ளி வாழ்க்கையைப் பற்றியோ, பள்ளிக் கூடங்களுடனான தமது உறவைப் பற்றியோ சிறிதேனும் சிந்திப்பதாகக் காணோம்.

தாம் தமது பிள்ளைகளுக்கு உடை, உணவு, போக்குவரத்து வசதிகள் செய்து கொடுத்ததுடன் தமது கடமைகள் முடிந்ததாகப் பெற்றோர் நினைக்கின்றனர்.

இதனால் பாடசாலையுடன் தொடர்பில்லாத பெற்றோரால் பல மாணவர்கள் பாடசாலைகளில் அந்நியப்பட்டுப் போவதைக் காண முடிகிறது.

இன்று பாடசாலைகளில் பெற்றோர் சங்கம், அபிவிருத்திச்சபை எனப் பல தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் பல பெற்றோர்கள் இச் சங்கங்களில் வெறுமனே அங்கம் வகிப்பதோடு மட்டும் நின்றுவிடுகின்றனர்.

தொடர்பாகக் கூட்டங்களுக்குப் போவதையோ, பாடசாலையின் அபிவிருத்தி, முன்னேற்றத்திற்கான கலந்துரையாடல்கள், பரிசளிப்பு விழா, விளையாட்டுப்போட்டி என்பனவற்றில் கலந்து கொள்வதோ இல்லை.

இதனால் பாடசாலையின் முன்னேற்றம், வளர்ச்சி என்பன மட்டுமன்றி, அதனிடம் தங்கியுள்ள தமது பிள்ளைகளின் வளர்ச்சியும், முன்னேறறமும் பாதிக்கப்படுகின்றது என்பதை ஏனோ இவ்வகைப் பெற்றோர்கள் மறந்துவிடுகின்றனர்.

# இதயநாதம்

செவ்வாய்க்கிழமை 27-03--1990

நல்வாக்கு

அற்பர்களுக்கு இடையில் அறிஞர்கள் எடுபடாமல் போவதில் வியப்பில்லை. பறையின் ஓசையில் யாழின் ஓசை எடுபடாது.

-யாரோ

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

'இந்தியா டுடே' நிருபரின் இலங்கை விஜய கட்டுரை

# இலங்கை அரசையும், விடுதலைப்புலிகளையும் இந்திய அமைதிப்படையே ஒன்றுசேர்த்தது

சந்தேக மேகங்கள் இன்னும் விலகிவிடவில்லை. இப்போதும் மண்ணில் தினமும் ரத்தம் சிந்தப்பட்டு வருகின்றது. சடலங்கள் சாலையோரங்களில் எரிகின்றன. ஏழு ஆண்டுகளின் கொடுமைகள் குறித்து அரசியல்வாதிகள் ஒருவரையொருவர் உரத்த குரலில் குற்றம் சாட்டிக்கொள்கிறார்கள். ஆனால், இவற்றின் நடுவே பலவிதபாதிப்புகளுக்கு உள்ளான இலங்கைத் தீவில் நம்பிக்கை என்னும் தென்றல் வீசிக் கொண்டு தான் இருக்கிறது. ஓட்டல் தாழ்வாரங்களில். சூட்பர் மார்க்கெட்டுகளில் அலுவலகக்கூடங்களில் நீங்கள். சந்திக்கும் மக்கள், கஷ்டகாலம் முடிந்துவிட்டது. 1990-ம் ஆண்டு,ரணகளமான இந்த நாட்டிற்கு அமைதியைக் கொண்டு வரும் என்று தாங்கள் நம்புவதாக, குரலைத் தாழ்த்திக் கொண்டு சொல்கிறார்கள்.

அதிக நம்பிக்கையுடன்இருப்பவர், வெகுஜன அரசியல்வாதியும் கவிஞரும் நாவலாசிரியருமான ஜனாதிபதி ரணசிங்கே பிரேமதாசா. ஏழு மாதத்திற்கு முன் ஆவேசமாக இருந்த ஜனாதிபதி அவர் 1989 ஜூலை இறுதிக்குள் இந்திய அமைதிப்படை திருபபி அழைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்று கேட்டு அதனால் இந்திய அரசுடன் பதட்டம் நிறைந்த சச்சரவு ஒரு புறமும், நாடு முழுக்கப்பரவிய வன்முறை மற்றொரு புறமும் வளைத்துக்கொண்டு முற்றுகையிட்ட நிலை, அன்று புரட்சிகரமான ஜே. வி பி. தீவிரவாதிகள் தான் உண்மையில் இலங்கையை அதன் பெரும்பாலான பகுதிகளை மறைமுகமாக ஆட்சி செய்தி கொண்டிருந்தார்கள், ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி (யூ. என். பி.) தலைமைப் பொறுப்புகளில் இருந்தவர்களிடம் ஒரு மனச்சோர்வு, ஆனல் இன்று 1990 ஜனவரி இறுதிவாரத்தில் பிரேமதாசா கஷ்டகாலங்களைக்கடந்து விட்டார் ஜே வி. பி தலைவர்களில், 90 சதவிதத்தினரை ஒழித்துக்கட்டவோ வழக்கில் மாட்டவோ செய்தாயிற்று. 45,000லிருந்து 20.000 ஆகக் குறைககப்பட்ட இந்திய அமைதிப்படை துருப்புகள் மார்ச் 31-ம் தேதிக்கு முன்னதாகவோ அல்லது இன்னும் சில நாட்களுக்குள்ளாகவோ முழுவதுமாகத் திருப்பிஅழைக்கப்பட்டுவிடும். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு அனைத்துப் பல்கலைக்கழகங்களும் திறக்கப்பட்டுவிட்டன. இலங்கைத் தொலைக்காட்சி ரூபவாஹினி தனது ஊழியர்கள் அலுவலகத்திற்கு வருவது அதிகரித்திருப்பதாகக் கூறுகிறது, இப்போது இலங்கையில் எந்த இடத்திலுமே வேலைநிறுத்தம் நடைபெறவில்லை. ஸ்காண்டிநேவியா, ஜெர்மானிய நாடுகளைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகள் இந்த முத்துத் தீவிற்கு வரத்துவங்கியிருக்கிறார்கள். குறைந்த எண்ணிக்கையில் அமெரிக்கர்களும் வருகிறார்கள். இன்னும இற்று விழுந்துவிடவில்லை, இந்தச் சொர்க்க பூமி.

இலங்கையின் தலைநகரான கொழும்பில் கண்ணைக்கவரும் ஜனாதிபதியின் அலுவலகத்தில் இரண்டு இந்தியக் கல்விமான்களுடன் பிரேமதாஸவை நான் சந்தித்து 90 நிமிடங்கள் பேசிக்கொண்டிருந்த போது. ''எல்லோரையும் அரவணைத்துச்செல்லும் எங்களது கொள்கைதான் இந்த மாற்றத்திற்குக் காரணம்'' என்றார் பிரேமதாஸ பெருமிதத்துடன் ''அரசியல் ரீதியான பிளவுகளை 'மனிதாபிமானத்துடன்' அணுகும் தனது அணுகுமுறையின் விளைவே இலங்கையில ஏற்பட்டிருக்கும் இந்த மாற்றம்'' என்று வெளியுறவுக் கொள்கையில் தனக்கு ஆலோசனை சொல்லும் உயர்நிலை அதிகாரிகள் சூழ்ந்திருக்க பிரேமதாஸ சொல்லிக் கொண்டார். ஜே, வி. பி-யின் பெரிய தலைவர்களைப் பிடிக்கத் தகவல் கொடுத்த, கைது செய்யப்பட்ட ஜே, வி, பி தொண்டர்களிடம் பாதுகாப்புப்படையினர் 'கருணை'யுடன் நடந்துகொண்டனர். ''அவர்கள் எங்கள் மக்கள். வன்முறை கலகத்தில் அவர்களை இறங்கச் செய்தவர்கள் நாங்கள்தான், அவர்களை ஜனநாயக நீரோட்டத்திற்கு நாங்கள் தான் மீட்டுக்கொண்டு வரவேண்டும்.''

பிரேமதாஸ மூன்று விஷயங்களைத் தனதுமுக்கியகுறிகோளாக வரித்துக்கொண்டிருப்பதாகச் சொல்கிறார். நியாயமான விதத்தில்சிறுபான்மையோரை நடத்துவது: விலகிச் சென்றுவிட்ட இளைய சமுதாயத்தின் நம்பிக்கையைப் பெறுவது; மிகப்பெரியவறுமை ஒழிப்புத் திட்டத்தைக்கொண்டுவருவது ஆகியவை அவை. ''சிங்கள இனதலைவர் புத்த பிக்குகள் மற்றும் எதிர்க் கட்சிகள் தமிழர்களுக்கு உண்மையான சுயாட்சி அளிப்பதை ஒப்புக்

### பப்னி சென் குப்தாபின்

கொண்டுபல இனங்களைக் கொண்ட நாடு இலங்கை என்பதை ஏற்றுக்கொள்வார்களா? உடனே ஜனாதிபதி சிந்தனை வயப்படுகிறார், அவர் வாயில் இருந்து வார்த்தைகள் மெதுவாக வருகின்றன,ஆம் என்று தான் கூறுவேன். ஆனால் எல்லோரும்உடனே ஒப்புக்கொண்டுவிடமாட்டார்கள்கடந்தஏழு ஆண்டுகளில்இந்தநாட்டில்நடந்தபயங்கர அனுபவங்களிலிருந்துஒவ்வொரு வரும் பாடம் கற்றுக்கொண்டிருக்கிறார்கள் நாடு மொத்தமும், ரத்தம் சிந்தப்படுவது கண்டு சலித்துப்போயிருககின்றது. பல இனங்களைக் கொண்ட சமுதாயம்என்பதை சிங்களவர்கள் இனிமேல் நிராகரிக்கமாட்டார்கள் என்று நான் நினைக்கிறேன்.

கொழும்பில் நான் சந்தித்துப் பேசிய நூற்றிற்கும் அதிகமானோரில் எல்லாருமே பிரேமதாச போன்று நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்லிவிட முடியாது. ஆனல், மூன்று முககிய பிரச்சினைகளில் கிட்டத்தட்ட ஒருமித்த கருத்து இருக்கிறது. முதலில் அமைதிப்படை வெளியேறியதும் பெரிய ரத்தக் களறி எதுவும் இருக்காது. விடுதலைப் புலியினருக்கும் கொழும்பிற்குமிடையே [illegible] சமாதானம் ஏற்பட்டுவிட்டால், நிருமைச்சர் குறிப்பிட்டதுபோல் 'ஆயுதம் தாங்கிய சகவாழ்வு' நிலவும், இரண்டாவதாக. தலைவர்களிலாத ஜே. வி. பிக்கு அரசியலில் பிடிப்புக் கிடைக்கப் பல ஆண்டுகள் பிடிக்கலாம். அந்நியமாகி நிற்கும் இளைஞர்களில்பெரும்பான்மையோரின் நம்பிக்கையை அரசு பெறுவதற்கான திட்டத்தைக் கொண்டுவரத் தேவையான அவகாசத்தை இது அளிக்கும். மூன்றாவதாக, ராணுவம் இலங்கையின் ஜனநாயகத்திற்கு ஆபத்து விளைவிப்பதாக இல்லை.

ஆனல் பொருளாதாரம் ஆபததில் இருககிறது, 8.7 கோடி டாலர் வெளிநாட்டு நிதியுதவி தகுந்த நேரத்தில் கிடைத்தது. அதற்கு மேல் பெரிய ஆதாயம் எதுவும் இல்லை. ஆரம்பத்தில் நம்பிக்கை தரும் துவக்கமாக இருந்த பொருளாதார வளர்ச்சி விகிதம் பின்னர் பொய்த்துப் போய்விட்டது. ஆனல் 1986-ல் பொருளாதார வளர்ச்சி மிகக் குறைவாக4 5சதவீதமாக இருந்தது இது ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்கு வந்தபோது 1977-ல் இருந்த கிட்டத்தட்ட அதே வளர்ச்சி விகிதம் (4.3) தான். 1987, 88-ல் பொருளாதாரம் 1. 6% 2. 5% என்ற வளர்ச்சி விகிதத்தில் ஊர்ந்து சென்றது. 1988 லிருந்து 18 - 22% என்ற அளவில் பண வீக்கம் இருந்து வருவதைக் கணக்கில் கொண்டால் எதிர்மறையான வளர்ச்சியின் பிடியில் இலங்கை சிக்கிக்கொண்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலையில், கிராமப்புறங்களில் நடைபெற்று வரும் இரக்கமற்ற கொலைகளை இந்த அரசிற்கு விழுந்த கரும்புள்ளி என்று சொல்ல வேண்டும். மக்கள் கண் எதிரிலேயே தெருக்களில் எரிந்து கொண்டிருக்கும் உடல்கள் வீசி எறியப்படுகின்றன. அவற்றை அப்புறப்படுத்த மக்களுக்குப் பயம். டிசம்பர் மாதத்தில் 14 நாட்களில் 615 பேர் கொல்லப்பட்டதாக அரசு நாளிதழ் ''டெய்லி நியூஸ்'' தெரிவிக்கிறது.

இந்தியாவின் மீதான இலங்கையின் உணர்வுகளும், இமேஜும் திடீரென்று நல்ல முறையில் மாறியிருப்பதை இந்த ஆண்டு ஜனவரியில் தில்லியிலிருந்து கொழும்பு சென்ற போது பார்க்க முடிந்தது. 'தில்லியில் உள்ள புதிய அரசை நாங்கள் நம்புகிறோம்" என்று கூறும் பிரேமதாஸ, பெரும்பான்மையான மக்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கிறார். இந்திய அமைதிப் படை மார்ச் 31 அன்று, அதற்கு முன்பு இல்லா விட்டாலும் விலக்கிக் கொள்ளப் படவேண்டும் என்ற உடன்பாட்டிற்கு ஆரம்பத்தில் சிறிது தயக்கத்திற்குப் பின் அவரது அரசு இணங்கியது. யாழ்ப்பாணத்திலிருந்து 'வாபஸ் துவங்கியபோது இந்த உடன்பாடு வலுப்பெற்றது. 'வாபஸ் நிபந்தனையற்றது என்று தேசிய முன்னணி உறுதி கூறியிருக்கிறது. இது குறித்து நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்' என்கிறார் பிரேமதாஸ.

இந்தியாவுடனான தங்கள் உறவில், தமிழ்நாட்டின் அம்சதனை இலங்கை மக்கள் அளவிற்கு அதிகமாகவே முக்கியத்துவம் தருகிறார்கள் இந்திய அரசியலில உள்ளூர இயங்கி வரும் சக்திகளை, அதி

— 7 ஆம் பக்கம் பார்க்க

- ''இனிமேலும் பல இனத்தன்மையை சிங்களர்கள் நிராகரிப்பார்கள் என்று தோன்றவில்லை.''
- ''இந்தியாவின் புதிய அரசை நம்புகிறோம். அமைதிப் படை வெளியேற்றம் நிபந்தனை அற்றது என்று உறுதி தந்திருப்பது குறித்து மகிழ்ச்சி.''
- ''பிரச்சினைகளை எங்களுக்குள்ளேயே சரி செய்வோம்.''
- ''வடக்கு, கிழக்கு மாகாண பொலிசில் தமிழர்களையும், முஸ்லிம்களையும் சேர்க்கத் துவங்கி விட்டோம்''
- ''ஜே. வி. பி-யைத் தேசிய நீரோட்டத்தில் இணைத்தாக வேண்டும்.''
- ''சிங்களரும் தமிழர்களும் இலங்கையில் அமைதியாக வாழ வேண்டும். இது அவர்களுடைய தாய் நாடு''.

—பிரேமதாச

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வன்னிச் செய்திகள்

## புலிகள் முன்மாதிரி

வவுனியாவில் விடுதலைப்புலிகள் மட்டுமே தலைக் கவசம் அணிந்து மோட்டார் சைக்கிள்களை ஓட்டுகின்றனர். இதுபற்றி புலிகளிடம் கேட்டபோது, மக்களுக்கு முன்னோடிகளாக இருக்க வேண்டும். அதற்காகவும், பாதுகாப்பு கருதியும் நாம் தலைக் கவசம் அணிகின்றோம். எமது தலைமைப்பீடத்தின் உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோம், எம்மைப் பார்த்து மக்களும் அப்படியே நடந்து கொள்வார்கள் என்று நாம் எதிர்பார்க்கின்றோம் என கூறினார்கள். (11)

## குழாய்மூலம் குடிநீர்

வவுனியா நகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்கள் முழுவதற்கும் குடிநீர் விநியோகம் குழாய் மூலம் வழங்கப்படவுள்ளது என இத்திட்டத்தின் முகாமையாளர் எஸ். சிவகுமார் தெரிவித்தார் நீர் தாங்கி வேலைகள் முடிவடைந்து விட்டது. தற்போது நீர்வழங்கலுக்குரிய குழாய்கள் பதிக்கும் வேலைகள் நடைபெறுகின்றது. 180 இலட்சம் ரூபா செலவு குழாய் பதிக்கும் வேலைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, 1991-ம் ஆண்டு முடிய முன்பு வவுனியா நகர எல்லைக்குள் வசிக்கும் சுமார் 20 ஆயிரம் மக்கள் இத்திட்டத்தின் கீழ் குடிநீரை பெற்றுக் கொள்ளுவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார், (11)

## பேசாலை கோத்தணி போட்டி

பேசாலை கொத்தணிப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டிகள் மன்னார் பேசாலை மகாவித்தியாலயத்தில் நடைபெற்றன, இப்போட்டியில் ஒன்பது பாடசாலைகள் கலந்து கொண்டன, பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட கல்விப்பணிப்பாளர் ஏ ரி சுந்தரலிங்கம் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினராக பிரதம கல்வி அதிகாரி ஏ. ரகீமும், மாவட்ட உடற்கல்வி அதிகாரி எம். எஸ் ஏ சரூனும் கலந்து கொண்டனர் இப்போட்டிகளில் முதலாமிடத்தை பாத்திமா மகாவித்தியாலமும் இரண்டாம் இடத்தை தலைமன்னார் பியர் அ. த க, பாடசாலையும் மூன்றும் இடத்தை புனித லோறன்ஸ் பாடசாலையும் பெற்றன,

## நியமனம் வழங்கப்பட்டது

மன்னார் மாவட்டத்தில் 292 பேருக்கு கடந்த 15-ம் திகதி பயிலுநர் ஆசிரியர் நியமனம் வழங்கப்பட்டது. இந்த நியமனக்கடிதங்கள் மன்னார் சுல் அசார் மகாவித்தியாலத்தில் வைத்து வழங்கப்பட்டது, இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் ஏ, கி, செபநாயகம் கலந்து கொண்டார், அத்துடன் விடுதலைப்புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சுரேஷ் கலந்துகொண்டு உரையாற்றினார். மன்னார் மாவட்டக் கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் நியமனக்கடிதங்களை வழங்கினர்,

## வவுனியாவில் இந்தியக் ஹெலி

வெள்ளிக்கிழமை நண்பகலில் வவுனியா ஊடாக இந்திய ஹெலிகள் பறந்து சென்றதினை காணமுடிந்தது. விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் வவுனியாவில் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டிருக்கையில் இந்திய ஹெலிகள் பறந்து சென்றன, திருமலையிலிருந்து இந்தியப்படையினர் வாபஸ் பெற்ற இந்தியன் ஹெலிகள் வவுனியா ஊடாகவே தாயகம் திரும்பியது குறிப்பிடத்தக்கது, (11)

## முல்லைக்கு புதிய பஸ் சேவை

காரைநகரிலிருந்து முல்லைத்தீவுக்கு அதிகாலை விசேஷ பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது காலை 4, 05 மணிக்குக் காரைநகரிலிந்து புறப்படும் இந்த பஸ், சித்தன்கேணி, வட்டுக்கோட்டை வழியாகக் காலை 5. 15 மணிக்கு யாழ்ப்பாணத்தை வந்தடைந்து, அங்கிருந்து காலை 5. 30 மணிக்குப் புறப்பட்டுப், பரந்தன் - புதுக்குடியிருப்பு ஊடாக முல்லைத்தீவைச் சென்றடையும்.

## வன்னி லயன்ஸ் நிர்வாகிகள்

வவுனியாமாவட்ட லயன்ஸ்கிளப் அங்குராப்பணம் செய்யப்பட்டுள்ளது. இதன் தலைவராக வைத்திய கலாநிதி எஸ். இளங்கோ ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டுள்ளார் துணைத் தலைவர்கள்:- டாக்டர் எஸ். வி. பரராஜசிங்கம், டாக்டர் வெ. கே. பாலசிங்கம் செயலாளர்பாவற்குளம் நீர்பாசனபொறியியலாளர் திரு. சிவசுப்பிரமணியம் தனாதிகாரி:- இறம்பைக்குளம் பங்குத்தந்தை அருட்திரு குரூஸ் அடிகள். உதவி தனாதிகாரி டாக்டர் எஸ். முத்துலிங்கம். (11)

## தாண்டிக்குளத்தில் இணக்கசபை

வவுனியா மாவட்டத்தில் தாண்டிக்குளம் கிராம சேவையாளர் பிரிவில் இணக்கசபை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதன் தலைவராக திரு எஸ். யோகானந்தம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். ஏழு பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவாகியுள்ளது. அப்பகுதி விடுதலைப் புலிகள் பொறுப்பாளர் நவாஸ் முன்னிலையில் இத்தெரிவு இடம்பெற்றது (11)

## கருமபீடம் ஒன்று மட்டுமே

வவுனியா மக்கள் வங்கியில் ஒரு கரும பீடமே சகல வங்கி அலுவல்களுக்கும் பாவிக்கப்படுவதால் மக்கள் அவதிக்குள்ளாகியுள்ளார்கள். பணம் வைப்பிலிடுவது, திரும்பப் பெறுவது உட்பட சம்பள கொடுப்பனவு மின்சாரக் கட்டணம் கொடுப்பனவு எல்லாம் ஒரே கரும பீடத்திலேயே நடைபெறுகின்றது.

## உழவுமாடு களவு போனது

பத்தாயிரம் ரூபா பெறுமதி உழவு மாடுகள் இரண்டு களவாடப்பட்டுள்ளது. பத்தினியார் மகிழங்குளம் என்னுமிடத்தில் இரவுவேளை இச் சம்பவம் நடைபெற்றுள்ளது, இதனுடன் தொடர்பாக விடுதலைப் புலிகளின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது (11)

# பெண்ணினத்தின் அகிம்சைப் போராட்டத்தில் அன்னை பூபதியே உலகில் முதன்மையானவர்

- கரிகாலன்.

அகிம்சையை மதிப்பதாகவும் தமிழினத்தை காக்க வந்ததாகவும், கூறிக்கொள்ளும் இந்திய இராணுவம் தமிழினத்தை காக்கவரவில்லை அகிம்சையை மதிக்க வில்லை என்பதை உலகிற்கு நிரூபித்துக் காட்டி இந்தியாவின் முகமூடியை கிழித்தெறிந்தவர் அன்னை பூபதி,

இவ்வாறு மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அன்னை பூபதி நினைவு தினத்தை முன்னிட்டு அடையாள உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்து உரை நிகழ்திய விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும் அம்பாறை-மட்டக்களப்பு அரசியல் பொறுப்பாளருமான எஸ். கரிகாலன் தெரிவித்தார்.

கரிகாலன் தொடர்ந்து உரை நிகழ்துகையில்:- அகிம்சைப் போராட்டத்தில் முதன்மையானவராக மகாத்மா காந்தியே உலகில் போற்றப்படுகின்றார் ஆனால் பெண்ணினத்தில் அகிம்சைப் போராட்டத்தில் முதன்மையானவராக உலகில் போற்றப்படுபவர் அன்னை பூபதியே ஆகும்' 'இந்திய இராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுகள் தமிழ் மக்களின் நெஞ்சைத் துளைத்த வேளையில் தமிழினத்தின் குரல்வளைகளை இந்திய இராணுவம் நெரித்த வேளையில் யாருமே முன்வந்து அதற்கெதிராக குரல் எழுப்பவோ அகிம்சை ரீதியில் போராடவோ முடியாத வேளையில் துணிந்து நின்று இந்திய இராணுவத்தின் முகமூடியை கிழித்தெறிந்து தமிழினத்திற்கு பெருமை தேடித்தந்தார்' 'இந்திய இராணுவம் சுற்றிவளைத்திருந்த வேளையில் விடுதலைப்புலிகள் வெளியே வந்து மக்கள் போராட்டத்திற்கு ஒத்துழைப்பு உதவி வழங்க முடியாத நிலையில் இந்த மட்டக்களப்பு மண்ணில் துணிந்து வந்து அகிம்சைப் போராட்டத்தில் ஈடுபட்டு உண்மையை உலகிற்கு எடுத்துச் சொன்னவர்' 'மக்கள் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகள் தான் என்பதை இக்கட்டான காலகட்டத்தில் துணிந்து கூறியவர் அன்னை பூபதி' என்றார் (05)

## கவனம்! ரயில் வேகமாக வரும்

மணிக்கு 125 கிலோ மீட்டர் வேகத்தில் ரயில்கள் ஓடுவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகிறது இதற்கென ரயில் பாதைகளில் போடப்படும் மரசிலிப்பர் கட்டைகளுக்குப் பதில் கொங்கிரீட்டிலான சிலிப்பர் கட்டைகள் போடப் படவுள்ளன. இதன் பொருட்டு கொங்கிரீட் சிலிப்பர் கட்டை உற்பத்தி செய்யும் தொழிற் சாலை ஒன்றும் தெமட்டகொடையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது தற்போது இலங்கையில் ரயில் வண்டிகளின் வேகம் 80 கிலோ மீட்டர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## பயிலுநர் ஆசிரியர்களுக்கு தொழிற்தூண்டல்கருத்தரங்கு

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் ஆசிரியர் பயிலுநர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட 58 பேருக்கும், சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிற் தெரிவு செய்யப்பட்ட 99 பேருக்கும் தொழிற் தூண்டற் கருத்தரங்கும், தற்காலிக நியமனப் பத்திரங்கள் வழங்கும் வைபவமும் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

மருதனுமடம் கோட்டக் கல்வி அலுவலர் ஆர். கே. குலசேகரம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்திற் பண்டத்தரிப்புக் கோட்டக் கல்வி அலுவலர் இ. சிவானந்தன் தற்காலிக நியமனக் கடிதங்களைப் பயிலுநர் ஆசிரியர்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு வழங்கினர். கல்வித் திணைக்கள அதிகாரிகள் சிலரும் இதிற் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள். (13)

## நடமாடும் வைத்தியசேவை மீண்டும் ஆரம்பம்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்ப்பாணப் பிரிவு மீண்டும் நடமாடும் வைத்திய சேவையை ஆரம்பித்துள்ளது.

இவ்வைத்தியக் குழுவினர் அண்மையில் வடமராட்சி கிழக்குப் பகுதியில் உடுத்துறை, கட்டைக்காடு கிராமங்களுக்கு விஜயம் செய்து நோயாளர்களுக்கு சிகிச்சை அளித்ததுடன் பெரியவர்களுக்கு கருத்தரங்கையும். இளம்யுவதிகளுக்கு சுகாதாரம் சம்பந்தமான பயிற்சி வகுப்பையும் நடத்தினர்(18)

## வேலணையில் இன்று

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு கோட்ட அமைப்பு புனரமைப்பு கண்காணிப்பு குழுக்கூட்டம்இன்று செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் இ. பாலசிங்கம் தலைமையில் அவரதுபணிமனையில் நடைபெறவுள்ளது.(19)

## செல்வச்சந்நிதி கும்பாபிஷேகம்

செல்வச்சந்நிதி முருகன் ஆலய கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை ஆறு மணிக்கு நடைபெறவுள்ளது, முருகப்பெருமானின் வீதிவலம் வருதலும் அன்று இடம்பெறும் இந்த நிகழ்ச்சியில் அளவெட்டி என் கே, பத்மநாதன், என் சிதம்பரநாதன் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரியும் இடம் பெறும் நண்பகல் அன்னதானமும் இடம் பெறும்:

## கர்நாடக இசைநிகழ்ச்சிகள் கலாசார சீரழிவை தடுக்கும்

'கர்நாடகஇசை அழிந்து வரும் இக்கால கட்டத்தில் உலர் வலய அபிவிருத்தி நிறுவனத்தின் இந்த முயற்சி போற்றத்தக்க தொன்றாகும்; இது போன்ற நிகழ்ச்சிகள் எமது கலாசார சீரழிவுகளைத் தடுக்கும்.'

இவ்வாறு நல்லை ஆதீனத்தில் இடம் பெற்ற கர்நாடக இசை நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட திரு. வே. ஞானேதரன் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த மாதாந்த கலைநிகழ்ச்சி உலர் வலய அபிவிருத்தி நிறுவனத்தின் கலாமன்றம் ஒழுங்கு செய்திருந்தது. இங்கு நடைபெற்ற புல்லாங்குழல் கச்சேரியில் திருமதி ஜெயநாதன் திலகரஞ்சனி ப. பத்மராஜன், செல்வி கிருஷ்ண வேணி மயில்வாகனம் ஆகியோர் பங்குபற்றினர்.

தாளவாத்தியக் கச்சேரியில் கண்ணதாசன் வீ. ராம் பா. கண்ணன் ஆர். துரைராஜா ஆகியோர் பங்குபற்றினர்.

செல்வி ஜேம்ஸ் கொலஸ்ருக்காவின் பாட்டுக்கச்சேரியும் திருவாளர்கள் கே ஆர். நடராஜா கே, பாய்க்கியராஜா எம். சிதம்பரநாதன் கே. சிவாநந்தம் ஆகியோர் பங்குபற்றிய பாட்டுக் கச்சேரியும் இடம் பெற்றது, மேற்படி நிகழ்ச்சிகள் திருமதி ஜெகதீசன் தலைமையில் இடம் பெற்றன. (03)

## சுழிபுரத்தில் தொழுநோய் பற்றி வைத்திய அதிகாரிகள் ஆய்வு

சுழிபுரம் மேற்கு காட்டுப் புலம கிராமத்தில் தொழுநோயினால் பாதிக்கப்பட்டவர்களையும் வைத்தியஅதிகாரிகள் குழுவினர் கடந்த வாரம் நேரடியாக பார்வையிட்டனர்.

தொழுநோய்த்தடுப்பு பற்றிய கருத்தரங்கு ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று முற்பகல் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் யாழ் பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சமூக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் என். சிவராஜா, யாழ்மாவட்ட தொழுநோய்த் தடுப்பு அதிகாரி திரு எம். குணரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

இக்கருத்தரங்கில் யாழ் மாவட்டத்தைச் சேர்ந்த அரசாங்க வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் மற்றும் திணைக்கள தொற்று நோய்த் தடுப்பு அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

கருத்தரங்குமுடிவடைந்ததும் தொழுநோய் பரவியுள்ள பகுதியான சுழிபுரம் காட்டுப் புலம் கிராமத்திற்கு நேரடியாக வருகை தந்த வைத்திய அதிகாரிகள் குழுவினர் தொழுநோயினால் பாதிக்கப் பட்டவர்களை நேரில் சந்தித்து தடுப்பு நடவடிக்கைகள் பற்றி எடுத்துக்கூறினார்கள். இப் பகுதியில் வீடு வீடாக சென்று தொழுநோய் பற்றிய ஆய்வுகளை நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது. [1ε[

## செயலக வங்கி மீண்டும் செயற்படும்

யாழ். மாவட்ட செயலக இலங்கை வங்கிக் கிளையை மீண்டும் ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ் இலங்கை வங்கிக் கிளை தற்போது ஆஸ்பத்திரி வீதியில் இயங்கி வருகின்றது. இக்கிளை செயலகத்தில் இயங்கத் தொடங்கினால் வாகன அனுமதிப்பத்திரம் உட்பட சகல நிவாரணக் கொடுப்பனவுகளும் இவ் வங்கியினூடாக வழங்கப்படும். (03)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பண்டாரகமவில் ஜனதிபதி அறிவுரை

# பெரும்பான்மையினர் ஏனைய சமூகத்தினரையும் சகோதரர்களாக மதித்து நடக்கவேண்டும்

''எந்த ஒரு வெளிநாட்டுச் சக்தியும் நான் பதவியில் இருக்கும்வரை நமது சுயாதீனத்தில் தலையிட அனுமதியளிக்கப்படமாட்டாது'' என்று ஜனதிபதி திரு. ஆர். பிரேமதாஸ பண்டாரகமயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மசாபொலவின் 9-வது பரிசளிப்புவிழாவிற் பேசுகையில் கூறினர்.

''இலங்கை ஒரு சிறிய நாடாக இருக்கலாம். ஜனத்தொகை குறைந்த நாடாக இருக்கலாம், ஆயுதபலமும், அதிகாரபலமும் நம்மிடம் குறைவாகவே இருக்கலாம், ஆனல் எமது தன்மானத்தையும், சுயாதீனத்தையும் நாம் பிறருக்கு விட்டுக்கொடுக்கப் போவதில்லை என்ருர் அவர்.

''நாட்டின் தன்னுதிக்கத்தையும் பிரதேச உரிமையையும் நாம் பாதுகாக்க



வேண்டுமானல் சனத்தொகையில் 75 சதவீதமாக இருக்கும் பௌத்த மக்கள் ஏனையசமூகத்தினரை சமத்துவமாகவும்நீதி, நியாயத்துடனும் நடக்த வேண்டும். தொழில் வாய்ப்பு விடயத்திலும் அது போன்ற ஏனைய விடயத்திலும் இன, மத, குல அரசியல் வேறுபாடுகளுக்கு இடமளிக்காமல் திறமை, தகுதி என்பனவற்றிற்கு முதலிடமளிக்கும் கொள்கையையே தற்போதைய அரசாங்கம் பின்பற்றுகின்றது'' என்றும் அவர் சொன்னர்.

## தளபதிக்கே இது தெரியவில்லை

'கடந்த இரண்டரை வருட காலமாக இலங்கையில் விடுதலைப் புலிகளுக்கும்- இந்திய இராணுவத்தினருக்குமிடையே நடைபெற்ற போரில் யார் வெற்றியடைந்தனர் என்று கூறுவது கடினம்' இவ்வாறு இந்திய இராணுவத் தளபதி வி. என். சர்மா தெரிவித்துள்ளதாக ஏ. எவ். பி. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

## ஒவ்வொரு மாவட்டத்திலும் இராணுவ படையணி அமையும்

ஒவ்வொரு மாவட்டத்திலும் இராணுவ கண்டோன்மென்ட் படையணிகளை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

ஏற்கனவே, இலங்கை இராணுவப்படையின் ஆட்பலம் ஐம்பதினயிரம் வீரர்களால் அதிகரிக்கப்பட்டதாகவும்; உள்நாட்டு விவகாரங்களில் சட்டம், ஒழுங்குகளைப் பேணிப் பராமரிப்பதற்கு இம் மாவட்ட இராணுவப் படையணிகள் ஒவ்வொன்றும் பொலிஸாருக்கு உதவி வழங்குமெனவும் இதன் மூலம் நாடு முழுவதற்குமான பாதுகாப்பை அரசு உறுதிப்படுத்துமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## அவரின் அன்னநடை அவரை காட்டிக்கொடுத்தது

ஏழு இலட்சம் ரூபா பெறுமதியான தங்கத்தை உடலுக்குள் மறைத்துக் கடத்த முயன்ற பயணி ஒருவரை அவரது விஞேத நடை காட்டிக் கொடுத்தது.

இது பற்றித் தெரிவிக்கப்படுவதாவது. சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயகா வந்த விமானத்தில் பிரயாணம் செய்த பிரஸ்தாப பாகிஸ்தான் பயணியின் நடை நூதனமாக இருந்ததால் அதிகாரிகளுக்கு அவர்மீது சந்தேகம் எழுந்தது. முதலில் தான் எதையும் மறைத்துக்கொண்டு வரவில்லை என அவர் மறுத்த போதிலும் அதிகாரிகள் உலோகம் கண்டுபிடிக்கும் கருவியை அவர்மீது பிரயோகித்தபோது குட்டு வெளிப்பட்டது. அவர் பொருள் ஒன்றை மலவாயிலுக்குள் மறைத்து வைத்திருப்பது புலனுகியது. இந்தத் தங்கப்பாளங்களின் பெறுமதி பெறுமதி ஏழு இலட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பிட்ட பயணி தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

### 200ரூபா சம்பள உயர்வு

## அரசு அனுமதி வழங்கியும் இவர்கள் இனனும் வழங்கவில்லை

அரசாங்க ஊழியர்களுக்கு கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் அதிகரிக்கப்பட்ட இருநூறு ரூபாய் சம்பள உயர்வு வடபிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியர்களுக்கு இது வரை வழங்கப்படவில்லை.

மேலும் சில மாதங்களுக்கு முன்பு அரசாங்க ஊழியர்களுக்கு கஷ்ட நிவாரணமாக வழங்கப்பட்ட ஆறு மாதங்களுக்கான அரை மாதச் சம்பளத் தொகையும் தமக்கு கிடைக்கவில்லையென ஊழியர் புகார் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கொடுப்பனவுகளை வழங்க அனுமதியளித்தும் வ. பி போ. ச, உயரதிகாரிகள் இது வரை நடவடிக்கை எடுக்காதது குறித்து கவலைதெரிவிக்கப்படுகிறது (41)

## சாகித்திய தினவிழா கொழும்பில் நடைபெறும்

தமிழ் சாகித்திய தினவிழா ஜூன்மாதத்தில் கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இவ் விழாவில் தமிழ் எழுத்தாளர்களுக்கான விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளதாக ராஜாங்க மந்திரி திரு. பி. பி. தேவராஜ் தெரிவித்துள்ளார்.

## பனை உற்பத்திப் பொருட்கள் விரைவில் ஜப்பான் செல்லும்

யாழ்ப்பாண மக்களின் மூலவளமான பனை உற்பத்திகள் விரைவில் ஜப்பான் நாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படும்' அந்தளவிற்கு இத் தொழிலில் தொழில் நுட்பம் நிறைந்துள்ளது.

இவ்வாறு சர்வதேசசெஞ்சிலுவை சங்க பிரதி நிதியான திரு. ருேஒகி கொக்கோவே தெரிவித்துள்ளார். (05)

## சுற்றுமதில் அமைப்பு

யாழ். லங்கா சித்த ஆயுள்வேத வைத்தியக் கல்லூரியை சுற்றி சுமார் 15 ஆயிரம் ரூபா செலவில் புதிய சுற்று மதில் அமைக்கப்பட்டு வருகின்றது.

கல்லூரி மாணவர் மன்றத்தின் முயற்சியினல் இந்த மதில் அமைக்கப்பட்டு வருவதாகவும், இது வரை காலமும் கட்டாக் காலி ஆடு மாடுகளின் தொல்லையினல் வளர்க்க முடியாதிருந்த ஆயுள் வேத மருத்துவ மூலிகைச் செடிகளையும், மரங்கள்களையும் மதில் அமைத்த பின்பு வளர்க்கக்கூடியதாக இருக்கும் என்றும் கல்லூரி உப அதிபரும், மாணவர் மன்றத்தின் காப்பாளருமான டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தெரிவித்தார். (13)

## ஊக்குவிப்புப்பணம் இவர்களுக்கு இல்லை

வன் செயல் ஊக்குவிப்புப் பணம் வழங்குவதில் வடக்கு கிழக்கு மாகாணக் கட்டிடத் திணைக்கள ஊழியர்களுக்கு பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாகக் கவலைதெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்க செயலகத்தின் பல் வேறு ஊழியர்களுக்கும் ஊக்குவிப்புப் பணம் வழங்கப்பட்ட போதிலும் கட்டிடத் திணைக்கள ஊழியர்களுக்கு இவ் ஊக்குவிப்புப் பணம் வழங்கப்படாதது தமக்கு அதிர்ச்சியையும் விசனத்தையும் அளித்துள்ளதாகப் பிரஸ்தாப ஊழியர்கள் முறையிட்டனர்.

## புதிய ஆசிரியர் நியமனம்

கிளாலி ருே. க. த. க. வித்தியாலயத்திற்கு புதிதாக ஐந்து பயிலுநர் ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டுள்ளனர் இதன் மூலம் இவ்வித்தியாலயத்தில் இருந்து வந்த ஆசியர் பற்றாக்குறை ஓரளவு நீங்கியுள்ளது. (18)

## 'அதிவிடயம்' வெளிவரும்

யாழ். லங்கா சித்த ஆயுர்வேத வைத்தியக் கல்லூரி மாணவர் மன்றம் ''அதிவிடயம்'' என்னும் கையெழுத்துப் பத்திரிகையை மாதம்தோறும் வெளியிடுவதென்று தீர்மானித்துள்ளது. (13)

# செய்தி மஞ்சரி

## பெண்களிடம் வடிசாராயம்

யாழ். ஹரன் தியேட்டர் ஒழுங்கையில் சட்டவிரோதமாக வடிசாராயம் விற்கும் இரு பெண்களிடம் இருந்து 120 போத்தல் வடிசாராயம் பறிமுதல் செய்யப்பட்டது. யாழ். நகரப் பகுதியில் ஐம்பது பெண்கள் சட்டவிரோத வடிசாராய விற்பனையில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## குண்டு வெடித்து ஒருவர் காயம்

முல்லைத்தீவு கடற்கரையில் கரையொதுங்கிய பார்சலைப் பிரித்துப் பார்த்த இராசையா பூபாலசிங்கம் (20) என்ற நபர் அந்தப்பார்சலில் இருந்த குண்டு வெடித்ததினல் காயமடைந்தார். கள்ளக்கேணி என்ற இடத்திலேயே இச்சம்பவம் நடந்துள்ளது. இந்தச் சம்பவம் நடந்த இடத்தில் மேலும் பல பார்சல்கள் கிடந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அடகு நகைகள் கிடைக்கும்

கிளிநொச்சி மக்கள் வங்கிக்கிளையில் நகைகளை அடகு வைத்து, 1989 ஆம் ஆண்டு 9ஆம் மாதம் 26ஆந் திகதிக்கு முன் பாகப்பணம் செலுத்தியவர்களுக்கான நகைகள் யாவும் இம் மாத இறுதிக்குள்ளாக வழங்கப்படுமெனப் பிராந்திய அலுவலகம் தெரிவித்ததாக மேற்படி வங்கி முகாமையாளர் சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

## ஆசன முற்பதிவு ஆரம்பம்

எதிர்வரும் ஏப்ரல் மாதம் முதலாம் திகதி தொடக்கம், யாழ்ப்பாணம்-கொழும்புப் புகையிரத ஆசனங்களுக்கான முற்பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 26 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரவிருந்த இத்திட்டம், இப்போது ஏப்ரல் ஒன்றிற்குப் பிற்போடப்பட்டுள்ளதெனவும் அதுவரை வழமைபோல, அன்றன்றே ஆசனப்பதிவு செய்து கொள்ளலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 28 விபத்து: 9 பேர் பலி

யாழ். மாவட்டத்தில் கடந்த ஜனவரி மாதத்திலிருந்து, மார்ச்மாதம் வரையில் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் 28 ஆகும் ஒன்பது உயிரிழப்புக்களை உள்ளடக்கிய இவ்விருபத்தெட்டு விபத்துக்களில்; ஜனவரிமாதம் இருவரும், பெப்ரவரி மாதம் மூவரும், மார்ச்மாதம் நான்கு பேரும் கொல்லப்பட்டுள்ளனர் என்றும்; சென்ற 18 ஆம் திகதிக்குப் பின்னர் எந்த விதமான விபத்துக்கள் பற்றியும் அறிவிக்கப்படவில்லை என்றும், யாழ்ப்பாணப் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

## காங்கேசனில் எலும்புக்கூடு

காங்கேசன்துறைச் சந்திக்கு அருகிலுள்ள பொது மலசல கூடத்துள் இருந்து ஆண் ஒருவரின் எலும்புக்கூடு ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. கடந்த ஜனவரி முற்பகுதியில் இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் சிலபேர் இயக்கம் ஒன்றினல் கடத்திச் செல்லப்பட்டனர் என்றும், கடத்தப்பட்டவர்களுள் ஒருவரின் எலும்புக்கூடாக இது இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

## மரம் முறிந்து யுவதி பலி

சாவகச்சேரி ஸ்ரேஷன் வீதியைச் சேர்ந்த பி. தயாளினி (25) எனும் இளம்பெண், சாவகச்சேரி நீதிமன்ற வளவினுள் நின்ற பாரிய மரமொன்று முறிந்து விழுந்ததால் மரணமானர். இச்சம்பவத்தில் அங்குநின்ற வீ. செபமாலை (45) வே. இராசா (30) ஆகியோர் படுகாயமுற்றனர்.

## பொசுங்கிய சடலங்கள்

புத்தளம் பகுதியில் பதினெரு சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் வார இறுதியில் தகவல் தந்தன.

இவை டயர்கள் மரக்குற்றிகள் போட்டு எரிக்கப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதன் பின்னணி பற்றிய விவரங்கள் வெளியாகவில்லை.

## காவிக்குள் கபடம்

குற்றச் செயலின் பேரால் மூன்று பிக்குகள் கைது செய்யப்பட்டு விசாரணையின் பொருட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களைத் தங்காலைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

## பாரத - பாக். கப்பல் வரும்

கொழும்புத்துறைமுகம், கப்பல்கட்டுத்தளம் ஆகியவற்றைக் கடந்தகால அமைதியற்றநிலை பெரிதும் பாதித்திருந்த நிலை இப்போது மாறி விட்டதால் இந்திய, பாகிஸ்தான் கப்பல்கள் பழுதுபார்க்கவோ ஏனைய காரணங்களுக்காகவோ இங்கு வரவில்லை. இப்போது இந்நிலை அகன்று விட்டதால் அவை இங்கு இனிவருமென்று கப்பல்துறை அதிகாரி ஒருவர் செய்தியாளரிடம் பேசுகையில் தெரிவித்தார்.

## பெரும் இசை நடனவிழா

கொழும்பில் மூன்று தினங்கள் மாபெரும் இசை, நடன விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

இந்து, சமய, கலாசார அமைச்சின் ஆதரவுடன் கொழும்பு விவேகானந்தாசபையினர் சபை மண்டபத்தில் இம்மாதம 30-ம், 31-ம் ஏப்ரல் 1-ம் திகதிகளில் இவ்விழாவை நடத்துகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நம்மைச் சுற்றி நடப்பவை

'பூட்ஸ்ராம்', 'தவுசண்ட் றுப்பீஸ்' இவை என்ன வென்று தெரிகிறதா?

அண்மையில் நியமனம்பெற்ற புதிய பயிலுநர் ஆசிரியர்களுக்கு அவர்களது சகாக்களால் சூட்டப்பட்டுள்ள 'செல்லப்'பெயர்கள்தான் இவை.

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள முக்கிய கொத்தணிப் பாடசாலையொன்றில் நியமனம் பெற்ற பயிலுநர் ஆசிரியர்களை அங்கு ஏற்கனவே கற்பிக்கும் ஆசிரியர்கள் இந்தச் 'செல்லப்'பெயர்களைச் சொல்லி மாணவர் முன்னிலையிற் கேலி செய்கின்றனராம்.

நமது ஆசிரிய சமூகத்தை இனிக் கடவுள்தான் காப்பாற்றவேண்டும்.

★ சிறிசன்

# மன்னாரில் உணவுப் பொருள் களஞ்சியப்படுத்த முடியவில்லை

மன்னார் மாவட்டத்திற்கு ரயில் மூலமாக அனுப்பப்பட்ட உணவுப் பொருட்கள் அங்கு களஞ்சிய வசதியின்மை காரணமாக மீண்டும் அநுராதபுரத்திற்கேரயில்மூலம்திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

முருங்கனில் உள்ள களஞ்சியத்தில் இரண்டாயிரம் மெட்ரிக் தொன் உணவுப் பொருட்களை சேமித்துப்வைக்கலாம். ஆனல் இக்களஞ்சியம் சீர் கெட்டு இருப்பதால் இங்கு களஞ்சியப் படுத்தமுடியாதுள்ளது.

மன்னார் ரயில்வே நிலையக் களஞ்சியத்தில் 700 தொன் உணவுப்பொருட்களைமட்டுமே சேமித்துவைக்கமுடியும் தற்போது மன்னார்க் களஞ்சியம் நிரம்பிவழிவதால்இப்பொருட்கள் திருப்பி அனுராதபுரத்திற்குஅனுப்பி வைக்கப்படுகிறது.

# தெல்லிப்பளை உ. அ. அதிபர்பிரிவு இவ்வாரம் நிவாரணம்

இவ் வாரம் காங்கேசன் துறை இலங்கை வங்கியில் தெல்லிப்பளை உ.அ அதிபர் பிரிவுக்கு ஆயிரம் ரூபா நிவாரணம் வழங்கப் படவுள்ளது,

செவ்வாய்: குரும்பசிட்டி, புதன்: பலாலி மேற்கு வியாழன்: அளவெட்டி வடக்கு, வெள்ளி: தெல்லிப்பளை வடமேற்கு கிராமசேவகர் பிரிவுகளுக்கு யாழ்.மாவட்ட செயலக அதிகாரிகளினல் காங்கேசன் வங்கியில் வைத்து வழங்கப்படவுள்ளது (03)

# அரச ஆசிரியர்கள் பாடசாலை நேரத்தில் தனியார் கல்வி நிலையங்களில் பணிபுரிய தடை

அரச துறையைச் சேர்ந்த முழுநேர ஊழியர்கள் யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் கல்வி நிலையங்களில் எக்காரணம் கொண்டும் கடமை நேரத்தில் (காலை 8 மணி முதல் பிற்பகல் இரண்டுமணி வரை) பணிபுரியக்கூடாதென தனியார் கல்வி நிறுவன ஒன்றியம் பணித்துள்ளது.

இது தொடர்பான பணிப்புரை தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் கல்வி நிலைய உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இப்புதிய முடிவுக்கமைய அரச பாடசாலைகளில் கடமை புரியும் ஆசிரியர்கள் இனிமேல் பாடசாலை நேரங்களில் ரியூட்டரிகளில் கடமை புரிய முடியாது.

தனியார் கல்வி நிலையம் உடனடியாக அமுல் செய்ய தீர்மானித்துள்ள ஏனைய முக்கிய முடிவுகள் வருமாறு:

✶ பாடசாலை நாட்களாகக் கருதப்படும் வார நாட்களில் காலை வகுப்புகள்யாவும் காலை 5 45 மணி தொடங்கி காலை 7.30 மணி வரைக்கும் என்ற வரையறைக்கப்பாற் படலாகாது. (வார நாட்களில் காலை 7.30 மணி தொடங்கி 8 மணி வரையில் வகுப்புகள் எவையும் நடைபெறுதல் கூடாது.)

✶ பகல் வகுப்புகள்யாவும் பாடசாலை தொடங்கும் நேரத்தில் தொடங்கி பாடசாலை முடிவுறும் நேரத்தில் முடிக்கப்படுதல் வேண்டும். தற்போதைய பாடசாலை நேரத்தின்படி காலை 8 மணி தொடங்கி பிற்பகல் 2 மணி வரையிலேயே வகுப்புகள் நடாத்தப்படல் வேண்டும். பாடசாலை நேரம் மாற்றப்படின் அதற்கேற்ப இந்நேர ஒழுங்கு மாற்றம் செய்யப் படலாம்.

✶ மாலை வகுப்புகள்யாவும் மாலை 3 மணி தொடங்கி 6 30 மணி வரைக்கும் உட்பட்டதாய் அமைதல் வேண்டும்.

✶ வார இறுதி நாட்களில் வகுப்புகள்யாவும் காலை 5.45 மணி தொடங்கி மாலை 6.30 மணி வரையிலான எந்நேரத்திலும் நடைபெறலாம்.

✶ போயா போன்ற அரச விடுமுறை தினங்களில், பாடசாலை மாணவர்களுக்கான வகுப்புகள் யாவும் காலை 5.45 மணிக்கும் பிற்பகல் 6 30 உட்பட்ட காலப்பகுதியின் எவ்வேளையிலும் நடாத்தப் படலாம்.

✶ பாடசாலைப்புற நடவடிக்கைகளில் மாணவர் பங்கு பற்றுமுகமாக வார நாட்களில் திங்கள், வெள்ளி ஆகிய இரண்டு தினங்களிலும் மாலை நேரங்கள் விடுமுறையாக விடப்படல் வேண்டும்.

க. பொ. த. உயர்தரம் ஆகஸ்ட் 90 பிரிவிற்கும், க. பொ. த. சாதாரண தரம் (மார்ச்) 90 பிரிவிற்கும் மாத்திரம் விலக்கு அளிக்கப் பட்டுள்ளது. திங்கள்,வெள்ளி ஆகிய இரண்டு தினங்களிலும் மாலை 3 மணி தொடங்கி 6.30 மணி வரையிலான நேரப்பகுதியில் இப்பிரிவுக்கான வகுப்புகள் நடைபெறலாம்.

## முரசொலிக்கு வந்த கடிதம்

# கூட்டுறவின் தத்துவம் அதிக விலையும் நிறைகுறைவுமா?

ஆசிரியர்,
முரசொலி.

பலநோக்குக் கூட்டுறவுச்சங்கங்கள் அங்கத்தவர்களுக்காக உருவாக்கப்பட்டன. பலசங்கங்கள் இன்றும் நல்ல நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றன. ஆனல் எமது கரைநகர் ப. நோ. கூ. சங்கக்கிளைகளில் 'நெருப்பு வெட்டு' (நிறை அளவுகளில்) வெட்டுகிறார்கள். அப்படியே இங்கு 'நெருப்பு விலையும்' விற்கிறார்கள். எனவே இதுவும் அங்கத்தவர்களுக்காகவா இயங்குகிறது? நெருப்பு வெட்டுபற்றி கிளை மனேச்ஜர்களிடம் கேட்டபோது சம்பந்தப்பட்டவர்கள் 'நெருப்பு வெட்டு' வெட்டித்தான் தருவார்கள் என்று சொல்கிறார்கள். இதனை தாக்குபிடிப்பதற்காக நாங்களும் 'நெருப்புவெட்டு' வெட்டிட வேண்டியுள்ளது. தட்டிக்கேட்டால் பழிவாங்கல் படலம் நடக்கும் என சொல்லி கவலைப்படுகிறார்கள். இவர்களிடம் 'நெருப்பு விலை' பற்றி கேட்டபோது மேலிடத்தில பல ஊழல் முறைகேடுகள் நடப்பதால் பொருட்களின் விலை நெருப்பாகவுள்ளது. என்கிறார்கள் இவர்களை தட்டிக்கேட்க எவருமே இல்லையா? கூட்டுறவு ஆணையாளர் ப. நோ. கூ. சங்கங்கள் மீது திடீர் பரிசோதனைகளை மேற்வகாள்ளுவாரா?

சிவகாமிஅம்மன் கோவிலடி,
காரைநகர்.

க. சிவராணி

# சாலிகளால் மட்டுமா சாலைகளில் சர்க்கஸ்?

ஆசிரியர்
முரசொலி

சாலி மோட்டார் சைக்கிள் ஓடி வேலிகளை யெல்லாம் பிடுங்கியெறியும் நங்கையர் சிலரால் பெரிய தொந்தரவாக இருக்கின்றது என இரு சகோதரர்கள் முரசொலியில் குறிப்பிட்டிருந்தனர். சகோதரர்களே, இதுவரைகாலமும் நடந்த சாலைவிபத்துக்களில் கூடிய வீதம் ஆண்களாலா? பெண்களாலா ஏற்பட்டுள்ளது என்பதை பத்திரிகைகள் மூலம் நீங்கள் அறியவில்லையா? பஸ்களில் போகும்போது ஆண்களின் தொல்லைகள் தாங்கமுடியாமல் தான் பெண்கள் இப்போது சாலிகளிலும் சயிக்கிள்களிலும் திரிகிறார்கள். அப்படிப்பட்ட பெண்கள் சாலியில் போகும்போது ஆனந்தமாகப் போகிறார்கள். ஏன் தெரியுமா? பஸ்களில் 'திருவிளையாடல்' புரியும் ஆண்களின் அட்டகாசத்திலிருந்து தப்பிவிட்டோம் என்ற ஆனந்தம் தான் அது சைக்கிளில்திரியும் ஆண்களுக்கு சாலியில் திரியும் பெண்களைப்பார்த்து குறைசொல்வது வழக்மாகப்போய்விட்டது. வேலிகளைப் பிடுங்கும் அளவுக்கு பெண்கள் சாலி ஓடவில்லை. மதுபோதையிலும், கூடிய வேகத்துடனும், விளையாட்டுத்தனமாகவும் வரும் ஆண்களால்தான் வேலிகள் மட்டுமல்ல மதில்களும் உடைக்கப்படுகின்றன.

சுன்னாகம்

து. கோமதி
மா. பிரியந்தினி

# யாழ் மாவட்டத்தில் ஆங்கில மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

கடந்த சில மாதங்களாக யாழ் மாவட்டத்தில் ஆங்கில மருந்துகளுக்கு தட்டுப்பாடு உண்டாகியிருக்கின்றது. கொழும்பிலேயே முக்கியமான ஆங்கிலமருந்து வகைகள் இல்லையென யாழ் குடாநாட்டு மருந்து விற்பனை நிலையத்தினர் தெரிவித்தனர். சாதாரண மருந்திலிருந்து விலையுயர்ந்த மருந்துகள் பலவிற்கு பலத்த தட்டுப்பாடுகள் நிலவுவதனுல் டாக்டர்களும் நோயாளர்களும் கஷ்டம் அனுபவித்து வருகின்றார்கள். இலங்கைக்கு தேவையான ஆங்கில மருந்து வகைகளில் முக்கால் பங்கிற்கு மேல் இந்தியாவிலிருந்தே முன்னர் தருவிக்கப்பட்டது. தற்போது மருந்து வகைள் மலேசியா,சீன போன்ற நாடுகளிலிருந்தே தருவிக்கப்படுவதுடன் அவற்றின் விலையும் இந்திய மருந்துகளிலும் பார்க்க கூடுதலாக உள்ளது ஆங்கிலமருந்துகளின் தட்டுப்பாட்டிற்கானகாரணம் தெரியாது விற்பனையாளர்கள் அங்கலாய்க்கின்றனர். (24)

## சுவையான செய்திகள்

# சுவரில் ஒட்ட ஒரு முத்திரை

உலகிலேயே மிகப்பெரிய தபால் முத்திரையை வெளியிட்ட பெருமையை சீன பெறுகின்றது. உலகின் சகல நாடுகளும் ஒவ்வொரு ஐடியாவில் முத்திரைகளை வெளியிட்டு வருகின்றன. இவற்றில் இயற்கைக் காட்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பது மலேசியாவாகும். உல்லாசப்பயணத்தின் வருமானத்தைப் பெருக்குவதற்கு சில நாடுகளின் முத்திரைகள் வெளியிடப் படுகின்றன. 1913-ம் ஆண்டு சீன வெளியிட்ட தபால் முத்திரையே இன்று மிகப்பெரிய முத்திரையாக உள்ளது. இதனது நீள அகலம் என்ன தெரியுமா 9.45 அடி நீளம் 2 5 அடி அகலம் அதுசரி இந்தப்பெரிய முத்திரையை எங்கு ஒட்டுவது?

# தீவு ஒன்று விற்பனைக்கு

ஸ்கொட்லாண்டின் மேற்கு முனையை ஒட்டி ஜிஜி என்று ஒருதீவு இருக்கிறது 3400 ஏக்கர் மிகப்பெரிய பிரமாண்டமான தோட்டமாக இது அமைந்துள்ளது. 19-ம் நூற்றுண்டிற் கட்டிய மாளிகை, 39 காட்டேஜ்கள் உள்ள ஹோட்டல், ஆறு விவசாயப்பண்ணைகள் என்பன இத்தீவிலுள்ளன. இந்தத்'தீவு' தற்பொழுது விற்பனைக்கு உள்ளது. விலை விபரம் சொல்வதறகு முன்னர் வில்லங்கம் இல்லாத சொத்து என்ற 'கரண்டியும்' உள்ளது. விலை 10 மில்லியன் டாலர் மட்டும் தான்.

# சஞ்சிகையில் படம் வந்ததால்

உலகப் புகழ்பெற்ற பாடகர் சூப்பர்ஸ்டார் மைகல் ஜாக்சனின் மூத்தசகோதரி லாடோயா ஜாகசன்(32) இவரும் ஒரு பாடகி. அண்மையில் மலேஷியாவின் தலைநகரான கோலாலம்பூரில் ஒரு கலைநிகழ்ச்சியில் இவர் குழுவும் கலந்து கொள்வதாக இருந்தது. ஆனல் கடைசி நேரத்தில் அதற்குத்தடை விதிக்கப்பட்டது. ஆண்களைக் கிளு கிளுக்க வைக்கும் அமெரிக்க சஞ்சிகை 'பிளே போயில்' உள்ளூர்க் கலாசார ஒழுக்கதிற்கு முரணன வகையிற் கடந்த வருடம் லாடோயா நிர்வாணமாகப் போஸ் கொடுத்திருந்தார். இந்த விபரம் மலேஷிய அரசுக்குத்தெரிய வந்ததாலேயே கடைசி நேரத்தில் அந்த இசைக்குழுவுக்குத் தடை விதிக்கப்பட்டது.

# பண்டத்தரிப்பில் தமிழ்த்தினப் போட்டி

பண்டத்தரிப்பு கோட்டக் கல்வி அலுவலக மட்டத்திலான தமிழ்த்தினப் போட்டிகள் அடுத்தமாதம் 8-ம் 9-ம் திகதிகளில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில்நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் கொத்தணி மட்டத்தில் முதலிடம் பெற்ற போட்டியாளர்கள் கலந்து கொள்வார்கள் என்றும், ஒரு பாடசாலை ஐந்து போட்டிகளில் மாத்திரமே கலந்து கொள்ள முடியும் என்றும் பண்டத்தரிப்புகோட்டக்கல்வி அதிகாரி இ. சிவானந்தன் தெரிவித்தார். (13)

# வேலணையில் மூலவளநிலையம்

வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் மூலவள நிலையமொன்றுதிறந்துவைக்கப் பட்டுள்ளது. இந்தநிலையத்தின் தேவைக்கென கல்வித்திணைக்களம் எழுபத்தி ஐயாயிரம் ரூபாவைவழங்கியதுதற்போது இந்த நிதியைக் கொண்டு இந்நிலையத்திற்கு தேவையான [illegible] (24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலியில் இன்று

27. 03. 90 செவ்வாய்

காலை

5.05 தோத்திரமாலை- காமாட்ஷி அம்மன் சுப்ரபாதம்
5 30 பாமாலை- முருகன் பிள்ளைத்தமிழ்
8.00 நாதவிநோதம்

பகல்

10.00 இசையமுதம்
10.30 பாட்டு-கே.இராம நாதன்
11.00 வீணைக்கச்சேரி- சிட்டிபாபு

மாலை

6.15 சைவநெறி
6.30 பொலிசாரும் நாமும்
6.45 கத்தோலிக்க சிறுவர் நிகழ்ச்சி- மலர்வேந்தன்
7.00 இளைஞர் மன்றம்- நடத்துபவர்: த. தேவதாஸ்

இரவு

9 30 கலையகத்தில் கலைஞர்- திருமதி லக்ஷ்மி நடராஜன் தொகுப்பு: சற்சொருபவதி
10 00 தாளவாத்தியக் கச்சேரி-கே. சண் முகம்பிள்ளை
10.30 மெல்லிசைப் பாடல்கள்
10.45 பஜன்-லக்ஷ்மி சங்கர்

## இலங்கை அரசையும்

3ம் பக்க தொடர்ச்சி

லும் குறிப்பாக இந்தியாவின் வடக்கு-தெற்கு அரசியல் உறவுகள் பற்றி இலங்கை மக்கள் அறியாமல் இருப்பது பெரிய ஆச்சரியம்.

இலங்கைப் பல்கலைக்கழகங்களில் இந்தியா பற்றிய துறை ஒன்று கூட இல்லை என்பதை மூன்று பேராசிரியர்கள் இலங்கைத் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

இப் போது இந்தியா மீதான போக்கிலும் ஒரு நெகிழ்வு தெரிகிறது. இந்திய அமைதிப் படை திரும்பிச் சென்ற பின்னர் இந்தியாவுடன் பொருளாதார ரீதியாக உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதை பிரேமதாசா எதிர் நோக்கியிருக்கிறார். இதனை அவர் டிசம்பரில் கொழும்பில் ஒரு முறை உரையாற்றும் போதும் அறிவித்தார். பினனர் இந்தியாவிலிருந்து சென்றவர்களுடன் பேசிக் கொண்டிருந்தபோதும் இதை வலியுறுத்தினார். ''நாம் இணைந்து உழைக்க வேண்டும்,செயல்பட வேண்டும்,இது நடக்கும்,நீங்கள்பார்ப்பீர்கள்''இவரது அமைச்சரவையைச் சேர்ந்த திறமையான,இலங்கை அரசியலில் எதிர்காலம் உடைய தோட்டத்தொழிலகத்துறை அமைச்சர் காமினி திஸநாயக்கே. இந்திய வர்த்தகத் துறை அமைச்சர் அருண் நேருவைச் சந்திக்க,தான் விடுத்திருக்கும் வேண்டுகோளுக்கான பதிலுக்காகக் காத்திருப்பதாக என்னிடம் கூறினார். 'தேயிலை ஏற்று மதியில் உற்சாகமான போட்டி ஏற்பட இந்தியாவுடன் சேர்ந்து செயல்படும் நோக்கத்தில் இருக்கிறோம்'' என்றும் இவர் சொல்கிறார்.

கடந்த காலத்தை விட இப்போது இந்தியாவை நோக்கி இலங்கை வரத் தொடங்கியிருப்பதற்கு எல்லா பெரிய நாடுகளும்— அமெரிக்கா, சோவியத் யூனியன், சீனா, பிரிட்டன்— இந்தியாவுடன் சண்டை போடாமல் இணைந்து செயல்படுமாறு 1987லிருந்து இலங்கை அரசை வற்புறுத்தி வருவதுதான்.

## இன்று நாள் எப்படி?

மேடம்: சுகஜீவியம், வாகன இலாபம், வணிகர்கள் கடற்தொழில் இயந்திரத்தொழில் மூலம் இலாபம்.

இடபம்: உயர்பதவி, பெரியோராசி, திடீர்ப்பிரயாணம், தேடியவர் வருகை, காதலர் மகிழ்ச்சி.

மிதுனம்: எண்ணியது நடக்கும், பிதாவழியுதவி, வாகன சுகம், இளைய சகோதரவழி உதவி.

கடகம்: உடல்ரோகம், பணச் செலவு, வாக்குக்கலகம், புதுத்தொழில், தெய்வஆசி.

சிங்கம்: தேடியவர் வருகை, விவாக நிச்சயம், தூரத்துச் செய்தியால் நன்மை, புதுத் தொழில்.

கன்னி: சத்துருபயம், புண்ணிய வழிபாடு, உத்தமர் உறவு, புதுத்தொழில், வாகனம் வணிகர்கள் சமபலன்.

துலாம்: புத்திரசுகம், திடீர்ப் பிரயாணம், மனையலங்காரம், வாக்குப்பலிதம், பிரிந்தவர்கள் ஒன்று சேருவர்.

விருச்சிகம்: மாதா வழியுதவி, வாகன மாற்றம், எண்ணியது நடக்கும், இளைய சகோதர வழியுதவி.

தனுசு: புகழ்தேடிவரும், தூரத்துச் செய்தியால் நன்மை, புதுமனைச்சிறப்பு, உயர்பதவி.

மகரம்: வாக்குப்பலிதம், பணவரவு, உத்தியோக உயர்வு, வணிகர்கள் கடற்தொழில் மூலம் இலாபம்.

கும்பம்: பெண்களாற்பகை, இராஜ வசீகரம், பெரியோராசி, புண்ணிய வழிபாடு, நினைத்தது நடக்கும்.

மீனம்: வாகன இலாபம், கைப்பொருள் நஷ்டம், பெரியோராசி, தூரத்துச்செய்தியால் நன்மை, தேடியவர் வருகை.

யாழ். சோதிடர்
ச அரியநாயகம்

பனிப் போரின் முடிவு, ஏற்கனவே பெரிய நாடுகளின் பார்வையில் இலங்கையின் முக்கியத்துவத்தைக் குறைத்து விட்டது. திருகோணமலை மீது அமெரிக்கர்களுக்கு ஆர்வம் இல்லை. 1987 கோடையில், திருகோணமலையில் எண்ணெய் சேமிக்கும் டேங்குகள் குறித்து இந்தியா ஒரு பிரச்சினையைக் கிளப்பியதிலிருந்து, அங்கு டேங்குகளை மீண்டும் கட்டுவதில் யாரும் எந்த ஆர்வமும் காட்டவில்லை. கொழும்பில் உள்ள 'வாய்ஸ் ஆஃப் அமெரிக்கா' வசதி பயன்படுத்திக் கொள்ளாமலேயே உள்ளது. பனிப்போர் வாடிக்கையாளர்களுக்கு மூன்றும் நாடுகளில் ஆங்காங்கே உள்ள இத்தகைய தளங்கள் மற்றும் வசதிகள் மீதான பசி தணிந்து விட்டது.

இலங்கை அரசையும், விடுதலைப் புலிகளையும் ஒன்று சேர்த்து வைத்தது இந்திய அமைதிப்படைதான்.

''பல இனங்கள் கொண்ட நாடு தங்களது நாடு என்பதை இலங்கை மக்கள் உணர்வதற்கும், அமைதியுடன் சேர்ந்து வாழ்வதற்கும் இந்தியா உதவி செய்திருக்கிறது இதில் சிறிதளவுகூட லாபநோக்கம் கிடையாது. எல்லாவற்றிற்கும் மேலாக, தங்களுடைய ஒரே அண்டை நாடு இந்தியா தான் என்பதை இலங்கை

மக்கள் புரிந்து கொண்டிருக்கின்றனர்'' இந்த வார்த்தைகளைக் கூறியது இலங்கைக்கான புதிய இந்தியத் தூதர் ஹோல்மத்ரா.அவருக்கு முன்பு இருந்த தூதரைப் போல இல்லாமல் இவர் இலங்கை மக்களால் மதிக்கப் படுகிறார். ஒரு நல்ல அண்டை நாடாக மட்டுமல்லாமல் பொருளாதார முன்னேற்றத்திற்கு, இந்தியாவுடன் சேர்ந்து செயல்பட வேண்டும் என்று சர்வதேச மாற்றங்கள் இலங்கை மக்களுக்குப்பாடம் கற்பித்துள்ளன இந்த இனிய பலன்களை இந்தியா, தோல்வி என்ற கசப்பு மருந்துடன் சேர்ந்து ஏற்றுக் கொள்ள வேண்டும், சில காலங்களுங்கு முன் கல்வி, சுகாதாரம், சத்துணவு ஆகியவற்றில், மூன்றும் உலக நாடுகளிடையே குறிப்பிட தகுந்த இடத்தை பெற்றிருந்த இலங்கையுடனான உறவுகளைப் புதுப்பிக்கும் பணியில், இந்தியா அந்தச்சிறிய நாட்டின் பயம், சந்தேகம் ஆகியவற்றைக் கணக்கில் எடுத்துக் கொண்டு மறுபடியும் இறங்க வேண்டும்.

இலங்கை மக்கள் மிகவும் பெருமை கொண்டவர்கள் என்பதை இந்தியர்கள் எப்போதும் மறந்துவிடக்கூடாது. சிறுமை... சொல்லில் இருந்து...

# மேகாலய அரசியலில் கருமேகம் சூழ்கிறது

(புதுடில்லி)

மேகாலயாவில் ,கூட்டர சாங்கத்தில் குழப்பநிலை உருவாகியுள்ளதாக அறிவிக்கப் படுகின்றது.

இது பற்றித் தெரிவிக்கப் படுவதாவது இங்கு இந்திரா காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய மேகாலய பாராளு மன்றக் குழுக் கூட்டணி அமைச்சரவையில் ஆறு அமைச்சர்கள் பதவி விலகி விட்டனர்.

மூன்று காபினெட் அமைச்சர்களும் மூன்று இணையமைச்சர்களும் தமது பதவி விலகலை ச் சமர்ப்பித்ததாக நேற்று தெரிவிக்கப்பட்டது.

இம்மாதம் 15ம்திகதி பதவி விலகிய முக்கியஸ்தர் திரு லிங்கோ புதிதாக அமைக்கப் பட்டுள்ள எதிர்த்தரப்பு ஐக்கிய மேகாலயா பாராளுமன்ற அமைப்பின் புதிய தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

இதே வேளை மேகாலய அமச்சரவை மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் தொடர்பான விவாதம்நேற்று நடைபெற விருந்தது.

## பிந்திய செய்தி

மேகாலயாவில் முதலமைச்சர் திரு, சன்மா தலைமையிலான கூட்டணி அமைச்சரவை பதவி விலகிவிட்டதாக அறிவிக்கப்படுகிறது மாற்று ஏற்பாடு செய்யப்படும் வரை பதவியில் நீடிக்குமாறு முதலமைச்சரை ஆளுனர் கேட்டுக் கொண்டுள்ளார்.

# மந்திரி ஹமீத் கிழக்கிற்கு விஜயம்

உயர்கல்வி, விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சர் ஜனாப் ஏ. ஸி. எஸ். ஹமீத் இன்று காத்தான்குடி விஜயம் மேற் கொள்ளுகிறார்.

அவர் இங்குள்ள முஸ்லிம்களைச் சந்தித்துப் பலதரப்பட்ட முக்கிய விடயங்கள் குறித்துக் கலந்தாலோசிப்பதுடன் ஏருவூர் ஒட்டமாவடி முதலியன கிராமங்களுக்குச் செல்லவுள்ளார்.

# மானி.மருதடி கொடியேறுகிறது

பிரசித்தி பெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய வருடாந்தமஹோற்சவம்எதிர் வரும் 29-ம் திகதி வியாழக் கிழமையன்று கொடியேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து உற்சவங்கள் நடைபெற்று அடுத்தமாதம் 7-ம் திகதியன்று மஞ்சத்திரு விழாவும் 13-ம் திகதியன்று சப்பறத் திருவிழாவும், 14-ம் திகதியன்று (புதுவருடதினத் தன்று) இரதோற்சவமும்,15ம் திகதியன்று தீர்த்த உற்சவமும் நடைபெறவுள்ளன,

இந்த வருடாந்த உற்சவத்தை சிறப்பாக நடத்துவது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் ஒன்று சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெறவுள்ளது. உற்சவத்தை முன்னிட்டு விசேட சுகாதார, பாதுகாப்பு, போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்வது என்று இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. (13

# மொழி, கலாசார தனித்துவம் இழக்கக்கூடாது

(ஹட்டன்)

மொழி. கலாசார தனித்துவத்தை இழக்காமல் தேசிய நீரோட்டத்தில் பங்குதாரராக வேண்டும்' என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளரும் போக்குவரத்து ராஜாங்க அமைச்சருமான எம். எஸ். செல்லச் சாமி கூறியுள்ளார்

ஹட்டனில் நடைபெறும் இ தொ. கா. பொன் விழாவில் அவர் அறிக்கை சமர்ப்பித்துப் பேசுகையிலேயே மேற்படி கருத்தை வெளியிட்டார்.

# டில்லியில் அரபாத்

பாலஸ்தின விடுதலை இயக்கத் தலைவர் திரு. யாசிர் அரபாத் மூன்று நாள் விஜயத்தை மேற்கொண்டு நேற்றுக்காலை புதுடில்லி வந்து சேர்ந்தார்.

நல்லை ஆதீனம் நடாத்தும்

முரசொலி அனுசரணையுடன்

இயல்,இசை, நாடகப் போட்டி

வெகு விரைவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் நடாத்தும் திருநெறிய தெய்வீக மகாநாட்டின் ஓர் சிறப்பம்சமாக ''முரசொலி'' நிறுவனத்தின் ஆதரவில் யாழ். பாடசாலைகளிடையே இயல், இசை, நாடகப் போட்டி நடாத்தப்படவுள்ளது, ''முரசொலி'' நிறுவனம் முதலாம் பரிசாக ஆயிரம் ரூபாவையும், இரண்டாம் பரிசாக எழுநூற்றி ஐம்பது ரூபாவையும், மூன்றும் பரிசாக ஐந்நூறு ரூபாவையும் வழங்குகின்றது. இப் போட்டியில் பங்கேற்கும் பாடசாலை ஒவ்வொன்றும் 15-20 நிமிட சொற்பொழிவு, 30-35 நிமிட பண்ணிசை 30-35 நிமிட நாடகம் /நாட்டியம் ஆகியவற்றை மேடையேற்றவேண்டும். மூன்று நிகழ்ச்சிகளிலும் தனித்தனி கிடைக்கும் புள்ளிகளைக் கூட்டிப் பரிசுக்குரிய பாடசாலை தேர்ந்தெடுக்கப்படும். விடயங்கள் யாவும் சைவ சமய உயர்வை மையமாகக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் பங்கேற்கும் மாணவர்களின் உடை. உச்சரிப்பு, பேச்சினிமை, இசையறிவு, சைவசமய பண்பாட்டைக் காண்பிக்கும் திறமை ஆகியனவும் கவனத்தில் கொள்ளப்படும். போட்டிகள் நடுவர்களின் தீர்ப்பே இறுதி முடிவாகும், விண்ணப்பங்கள் 28-05-90க்கு முன் ஆதீனத்திற்கு கிடைத்தல் வேண்டும்.

WANTED

| | | |
|---|---|---|
| Computer Teacher (Graduate preferred) | | Salary |
| Basic d Base III | | 250 USD |
| Crank Shaft Operator | 1 | 200 USD |
| Welder (Cutter) | 1 | 100 USD |
| Spray Painter | 1 | 125 USD |
| Tinker | 1 | 125 USD |
| Welding with Lathe | 2 | 150 USD |
| Labourers (Welding/Construction | 5 | Rs. 3000/- |

Plus Board & Lodging

Dr. T. Viswanathan
'RAJASTHAN',
KEERIMALAI ROAD, SANDILIPAY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிலுநர் ஆசிரியர்களுக்கு ஏனைய ஆசிரியர் போல் சம்பளம், உரிமை வேண்டும்

நாடு முழுவதும் தெரிவுசெய்யப்பட்டுள்ள 25,000 பயிலுநர் ஆசிரியர்களுக்கு ஏனைய ஆசிரியர்களைப்போன்று சம்பளமும் மற்றும் உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்படவேண்டும் இவ்வாறு சர்வதேச சுதந்திர ஆசிரியர்சங்கமும், பிரெட்ரிக்ஈபேக் மன்றமும், இலங்கைத் தமிழர் ஆசிரியர்சங்கமும் இணைந்துநடாத்திய கஷ்டப்பிரதேச பாடசாலையில் கல்விப்பிரச்சினை சம்பந்தமான கருத்தரங்கில் இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர்திரு த.மகாசிவம் அவர்கள் தெரிவித்தார்.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கருத்தரங்கிற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைத்தலைவர் திரு. எம். பாலசுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்.

இக் கருத்தரங்கிற்கு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க நிதிச் செயலாளர் திரு. என். சோதிநாதன் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தொடர்ந்து இரண்டுநாட்கள் நடைபெற்ற இக் கருத்தரங்கில் முதலாம்நாளன்று பிரதம விருந்தினராக கிளிநொச்சி உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. எஸ் தனஞ்செயன் அவர்கள் கலந்துகொண்டார்.

இக்கருத்தரங்கின் ஆரம்பத்தில் மறைந்த போராளினதும் அன்னை பூபதி கணபதிப்பிள்ளை ஆகியோரினதும் நினைவாக 2 நிமிடநேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. (43)

## யாழ். மாவட்ட புனரமைப்பு, அபிவிருத்தித்திட்ட 1990-ம் ஆண்டிற்கான மதிப்பீட்டு அறிக்கை தயார்

1990-ம்ஆண்டுக்கான யாழ் மாவட்டபுனரமைப்பு, அபிவிருத்தித்திட்டத்திற்குரிய மதிப்பீட்டுஅறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில்யாழ்மாவட்டத்தில் உள்ள பன்னிரண்டு அரசதிணைக்களங்களுக்கு நிதி ஒதுக்கீட்டிற்கான மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது

மேற்படி மதிப்பீட்டு அறிக்கை வடகிழக்கு மாகாண சபைக்கும் மத்திய அரசிற்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக யாழ் மாவட்ட அரசதிணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்ட கூட்டம்ஒன்று நேற்று யாழ் அரசாங்க அதிபர் தலைமையில் செயலகத்தில் இடம்பெற்றது.

இம்மதிப்பீட்டு அறிக்கைக்குரிய நிதி இங்குவந்துசேர்ந்தவுடன் புனரமைப்பு, அபிவிருத்தி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படுமென யாழ் அரசாங்கஅதிபர்திரு. அன்ரன் அல்பிரட் தெரிவித்தார். (03)

## 1989ம்யாழ்மாவட்ட அபிவிருத்தி திட்டங்கள் பல செயற்படவில்லை

தற்போது தயாரிக்கப்பட்டுள்ள. 1990ம் ஆண்டுக்குரிய யாழ் மாவட்ட அபிவிருத்திட்ட மதிப்பீட்டு அறிக்கையில் கூடுதலாக 1989ம் ஆண்டுக்குரிய அபிவிருத்திட்டங்களே சேர்க்கப்பட்டுள்ளன:

1989ம் ஆண்டு தயாரிக்கப்பட்ட அம்மதிப்பீட்டு அறிக்கையில் உள்ள பல திட்டங்கள் இது வரை செயற்படுத்தப்படாத காரணத்தினாலே 1990ம் ஆண்டு மதிப்பீட்டு அறிக்கையில் கூடுதலாக 89ம் ஆண்டுத் திட்டங்களே காணப்படுகின்றன. (03

### வளசெயலின...

சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது, (3)

### சுந்தரலிங்கம்...

யில் இருந்து எம். எம். ஏ. புத்தூஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த மாற்றங்கள் குறித்து கடந்த 9-ம் திகதி முரசொலி ஊகம் தெரிவித்திருந்தது வாசகர் அறிந்ததே. (03)

### அன்னை...

அங்குள்ள முதியோர்களுக்கு அன்னதானம் வழங்கவும் மறுமலர்ச்சிக்கழகம் ஏற்பாடுசெய்துள்ளதாக கழகவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

### உதவி ஆசிரியர்...

பதி அலுவலகம், பொதுநிர்வாக அமைச்சு,கல்வி அமைச்சு ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டுள்ளதாகவும், விரைவில் சாதகமான முடிவுகிடைக்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் தெதரிவித்தார்.(43)

### திருமலை...

சேரிஊழியர்கள், பெபதுமக்கள், கோணேஸ்வர ஆலயத்திற்வழிபடச்சென்றபக்தர்கள் சிங்களக் காடையர்களால் படுமோசமாகத் தாக்கப்பட்டதையடுத்து கடந்த 11 மாதங்களாக உள்துறைமுக வீதியிலுள்ள பழைய கச்சேரி அலுவலகத்திலேயே அவர்கள் பணியாற்றிவந்தனர்.

பிரடெரிக் கோட்டைப்பகுதியில் அகதிகள் என்ற] பெயரில் தங்கியிருக்கும் சிங்களக் காடையர்கள் வெளியேற்றப்படவேண்டும் என்றும், கடமைக்கு செல்லும் போது தமக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும் கோரி ஊழியர்கள் வேலைக்குச் செல்லாதிருந்தனர்.

ஆனால் கடந்த 11 மாதங்களாக இந்தியப்படையினர் இந்த கோரிக்கைகளை நிறைவேற்றத்தவறிவிட்டனர்.

கடந்த 11மாதங்களாக இந்தியப்படையால் சாதிக்க முடியாததை கடந்த 2 நாள்களில் விடுதலைப்புலிகள் சாதித்து விட்டதாக ஊழியர்கள் திருப்தி தெரிவித்தனர்.

சிங்களக் காடையர்கள் அப்பகுதியில் இருந்து வெளியேற்றப்படுவதுடன் ஊழியர்களுக்குப் பாதுகாப்பும் வழங்குதற்கான உறுதியை விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியற் பொறுப்பாளர் ரூபன் அறிவித்துள்ளார்.

தேங்கிக்கிடக்கும் கச்சேரி வேலைகளை ஊழியர்கள் கூடிய விரைவில் செய்து முடிக்கும்படி திருமலை அரசாங்க அதிபர் திரு. ஏ. தே. விஜயதோன் கேட்டுள்ளார்.

இதேவேளை கோணேசர் ஆலயமும் தினசரி திறக்கப்பட்டு பூசைகள் நடைபெறுவதற்கான ஏற்பாடுகளையும் ஆலய நிர்வாகிகள் செய்து வருகின்றனர். (05)

## வன்செயலில் பாதிக்கப்பட்ட அரசாங்கக் கட்டடங்கள் கிளிநொச்சியில் புனரமைப்பு

கிளிநொச்சி மாவட்ட அரசாங்கக் கட்டடங்கள் புனரமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவருகின்றது.

கடந்தகால வன்செயல்களின்போது கிளிநொச்சி மாவட்டத்தின் பஸ்நிலையம் மற்றும் சந்தை உட்பட பல கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டன.

அத்துடன் கிராமப்புறங்களில் இருக்கும் பல அரசாங்க கட்டடங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றைப் புனரமைப்பதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் பட்டுள்ளதாக தெரியவருகின்றது (03)

## இன்று ஹமீத் மட்டு விஜயம்

கடந்த வாரம் மேற்கொள்ளப்பட்டிருந்து பின் போடப்பட்ட ஜனாப் ஹமீத்தின் மட்டு நகர் விஜயம் இன்று நடைபெறும் என எதிர்பாக்கப்படுகிறது. (05)

### தாயகம...

நாடான பாகிஸ்தானுடன்யுத்தம் ஏதும்ஏற்பட்டால் இந்திய எல்லைகளைக் காப்பதற்காகவும் இவர்கள் காஷ்மீர் பகுதியில் உஷார் நிலையில் வைக்கப்படுவர் என இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது:

## திருகோணமலைக்கு 100 பொலிஸார்

இந்திய அமைதிப்படையின் வெளியேற்றத்தை அடுத்து திருகோணமலை மாவட்டத்திற்கு 100 இலங்கைப் பொலிஸார் அனுப்பிவைக்கப்பட்டிருப்பதாக வடக்கு, கிழக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் திரு எஸ். ஆனந்தராசா தெரிவித்தார்.

திருகோணமலை நகரில் சட்டத்தையும், ஒழுங்கையும் பாதுகாக்கும் நடவடிக்கையில் இப்பொலிசார் ஈடுபடுத்தப்படுவார்கள் என அவர் மேலும் தெரிவித்தார்.

### தெனபகுதி...

மடுவுக்கு தென்பகுதி அடியார்கள் கூட வழமைபோல் வந்து செல்லலாம்.

அமைதியான சூழ்நிலை இன்று காணப்படுகின்றது. அடியார்கள் மடுவுக்கு சென்று தமது வழிபாடுகளில் கலந்து கொள்ளலாம் எனவும் தினேஸ் தெரிவித்தார். (11)


## 31-ம் நாள் நினைவஞ்சலி



கந்தையா கதிரவேலு

பிறப்பு 15 - 04 - 1912    இறப்பு 25 - 02 - 1990

அன்பிலும் பண்பிலும் அறிவிலும் பலரும் பாராட்டும்படி வாழ்ந்து குடும்பத்தவர், உற்றார், உறவினர்க்கு ஊருள் பழுத்த மரம்போல உதவிபுரிந்த எமது தந்தையே! குடும்பத் தலைவரே! உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மக்கள். பெருமக்கள், மருமக்கள் மைத்துனர், பேரப்பிள்ளைகள்

ஸ்ரீமதி பொன்னையா லேன், ஆனைக்கோட்டை.

03219

ஞாபகப்படுத்துகின்றோம்

இன்று 27 - 03 - 1990 செவ்வாய்க்கிழமை

செஞ்சிலுவைக் கொடித் தினம்

" உங்களுக்கு உதவ எமக்கு உதவுங்கள் "

73, கண்டி வீதி
யாழ்ப்பாணம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். பிரிவு

03218


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ்,[பிறைவேட்]லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாண ஸ்ரான்லி வீதி 62ல் இலக்கத்திலுள்ள அச்சகப் பிரிவில் 27-03-1990ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org